
# எமது கருதினல் அடிகளின் மேற்றிராணித்துவ வெள்ளி யூபிலி விழா

## கொழும்பு ஆசனக்கோவிலில் கண்கொள்ளாக் காட்சி



நமது கருதினல் தோமஸ் கூறே அடிகளார் திருச்சபையின் ஆயர்களில் ஒருவராக அபிஷேகம் செய்யப்பட்ட 25வருட நிறைவு இம்மாதம் 8-ம்திகதி கொழும்பு அதிமேற்றிராசன ஆசனக்கோவிலான சன் லூசியா தேவாலயத்தில் வெகு பயபக்தியுடனும் சிறப்பாகவும் கொண்டாடப்பட்டது. அன்று மாலை கருதினல் அடிகளார் இலங்கையின் ஏனைய மேற்றிராணிமார், உதவி மேற்றிராணிமார், சுமார் 100 குருப்பிரசாதிகளுடன் சேர்ந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்த காட்சியின் மகத்துவமும் சிறப்பும் அங்கு சமூகமாயிருந்த எல்லோரின் மனதிலும் என்றும் படிந்திருக்கும். அன்றியும் அவ்வமயம் குழுமியிருந்த விசுவாசிகள்மாட்டு காணப்பட்ட மட்டற்ற விசுவாசப்போக்கும் தேவநேசப் பெருக்கும் மாபெரும் மனவருட்சிக்குரியதாயிருந்தது.

திருப்பலியின்போது சிலாப உபமேற்றிராணியாரான மார்க்குஸ் பெர்னாண்டோ அடிகள அவர்களால் கனிவான ஒரு பிரசங்கம் சொல்லப்பட்டது. ஆயிரக்கணக்கான விசுவாசிகள் திருவிருந்து அருந்தினர். திருப்பலியின்பின் கருதினல் கூறே அடிகளார், தம்முடன்சேர்ந்து தேவனுக்கு நன்றிகூறி, இவ்விழாவில் கலந்துகொண்ட சகல மேற்றிராணிமார், குருமார், மற்றோர் எல்லோருக்கும் தமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். வெளிப்பகட்டு, ஆடம்பரமின்றி ஆன்மசுருமசிரத்தையுடன் இவ்விழா யூபிலிநாயகரின் வேண்டுகோளின்படி, கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தேவன் எமது கருதினல் ஆண்டகை அவர்களை என்றும் ஆசீர்வதித்துக் காப்பாற்றுவாராக.

## இங்கிலாந்திலும் தெரேசா தாயாரின் நிலையம்

யாருடைய ஆதரவுமற்ற குஷ்டரோகிகள் முதலானோருக்கு ஆதரவு அளிப்பதற்காக முதன் முதல் இந்தியாவில் கல்கத்தாநகரில் சேவை செய்துவந்த தெரேசா தாயார் உலகில் வேறுபல இடங்களிலும் சமீபகாலத்தில் தமது சேவையைப்பரப்பிவருகின்றார். அவருக்கு உதவியாக பலகன்னியாஸ்திரிகள் தொண்டாற்றி வருகின்றனர். இருமாசங்களின் முன் இங்கிலாந்திலும் அவரதுஉதவி நிலையமொன்று மிடின்செக்ஸ் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிலையத்தைத் திறந்துவைத்து, வேலையை ஒழுங்குபடுத்திச் செல்வதற்காகதாயார்கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்துக்குப் பிரயாணம்செய்திருந்தார்.

### ஒரு நல்லசெய்தி

தற்போது மேற்கு ஜேர்மனிக்கும் கிழக்கு ஜேர்மனிக்குமிடையில் பேர்லின் நகரமதிலை அகற்றிவிடுதலைப்பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. மதிலுக்குக் கிழக்குப்பாகத்திலுள்ள இனசனரை இந்த ஈஸ்ரர் திருநாளின்போது மதிலுக்கு மேற்கே உள்ள பேர்லின் நகரமக்கள் தரிசிக்க கிழக்குபேர்லின் அதிகாரிகள் சம்மதித்திருப்பதாகச்செய்திகள் கிடைத்திருக்கின்றன.

## ஆசிரியர் ஞானொடுக்கம்

காலம்: 16-3-71 பி: ப. 5மணி தொடக்கம் 19-3-71 காலை 7மணி வரை:

இடம்: பண்டத்தரிப்பு,ஞானொடுக்க இல்லத்தில்

போதகர்: அதிவந்: எல்: ஆர்: அன்ரனி ஆண்டகை, யாழ். துணை மேற்றிராணியார்.

17-ம், 18-ம் தேதிகளில் பி. ப. 3மணிக்கு மறைக்கல்வி பற்றிய உரைகள் நடைபெறும்.

கருத்தரங்கு: 19-3-71:

பேச்சாளர்கள்: காலை 9-00: திரு: எஸ்: பி: சிவபாதம், கல்வி ஆலோசகர்:

10-30: வண. பிதா ஏ. மதுரநாயகம், அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்.

பி. ப. 2-30: திரு. யே. ஜீ.அரசரெத்தினம், இளைப்பாறிய அதிபர், நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.

முடிவு பி. ப. 4—00:

ஞானொடுக்க இல்லத்தில் 50ஆசிரியர்களுக்கு மாத்திரம் இரவு தங்குவதற்கான இடவசதிகள் உள்ளன. ஆகவே, அண்மையில் இருப்பவர்கள் காலையில் வந்து மாலையில் வீடு செல்லலாம்:

இறைவன் அளித்துள்ள இவ்வரிய சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளுமாறு உங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்:

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக,

ஜீ. ரி. பாலசுந்தரம்,
ஓ: எம்: ஐ:

மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர்இல்லம், யாழ்ப்பாணம்,
7-3-71.

## பொலிசாரின் நற்சேவைக்கு சமயக்குருமாரின் உதவி அவசியம்

இலங்கைப் பொலிஸ்இலாகாவில் ஒரு புதிய பகுதி நிறுவப்பட்டிருக்கிறது. பொதுஜனங்களுக்கும், பொலிசாருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதே இதன்நோக்கம். இப்பகுதியின் தலைவராக திரு. எச். பி. தசநாயக்கா நியமிக்கப்பட்டிருக்கின்றார். பொதுஜனங்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நல்லதொடர்பு ஏற்படுத்துவதற்கு இந்நாட்டிலுள்ள சகல சமய குருமாருடைய ஒத்துழைப்பு அவசியமென எடுத்துக்காட்டி அதைக்கொடுத்துதவ அவர்களைக் கேட்டிருக்கின்றார். பொதுஜனங்களுக்கு பொலிஸ் பகுதியைப் பற்றித் தற்போதுள்ள தப்பபிப்பிராயங்களை மாற்றுவதற்கு குருமாருடைய உதவியை அவர் வேண்டுகின்றார்.

## மக்களின் சகோதரத்துவ விழா

சென்றவாரம் தெகிவலை—கல்கிசா நகரசபை மேயராகிய எல். வி. குணரத்தின அவர்களின் தலைமையின்கீழ் ஆறுயிரத்துக்கு மேற்பட்ட பல சமய மக்கள் ஒன்றுகூடி மக்களின் சகோதரத்துவ விழாவைக் கொண்டாடினர். பலசமயத்தைச் சேர்ந்த குருமாரும் பெரியாரும் சொற்பொழிவுகள் ஆற்றினர். நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தில் "ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன்" என்றகோஷம் எழுப்பப்பட்டது. கத்தோலிக்கரின் சார்பில் சொற்பொழிவாற்றிய வணக்கத்துக்குரிய நேரியஸ் பெர்னாந்து சுவாமியார் உலகின் சிலபாகங்களில் தோன்றியிருக்கும் இனத்துவேஷத்தைக் கண்டித்து, அதை மாற்றுவது சட்டங்களினால் முடியாத காரியமென்றும் உண்மையை மக்கள் உணரச் செய்வதன் மூலமே முடியுமெனவும் கூறினார்.

சத்தியவேத

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

# பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் கார்க்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்."

96ம் புத். | 1971-ம் ஆு பங்குனிமீ 13-ந் உ சனிக்கிழமை | பிரதி சதம் 15 | 9-ம் இல.

# இளைஞர் உலகு



## அன்புச் சோதரர்க்கு!

சில இடங்களில் மழைகாலத்தில் ஆறுகள் வற்றித் தோடுகின்றன. ஆனால் கோடைகாலத்திலோ வற்றி வரண்டுவிடுகின்றன. இப்படியான இடங்களில் உள்ளவர்கள், அணைக்கட்டுகள்மூலம் நீரைத் தேக்கி கோடைகாலத்தில் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். இதேபோன்று நமது உடல் மூளை என்பவற்றின் ஆற்றல் என்னும் ஆறும் நமது நடு வயதிலும் முதுமைப்பருவத்திலும் வற்ற ஆரம்பித்துவிடும் ஆனால் இளம்பருவத்தில் அதைச்சிதறச்செலவிட்டு வருவோமானால் முதுமையிலும் நாம் இளைஞர் போன்று சடகாத்திரராய் வாழலாம். எனவே எமது இளமைப்பருவத்தை பயனுள்ள வழிகளில் செலவிடுவோமாக.

இளைஞர் உலகுபற்றிப் பாராட்டுக் கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. காலகதியில் அவை இப்பகுதியில் இடம்பெறும். புதிய அம்சங்களைச் சேர்க்கும்படி அநேகமானோர் கேட்டுள்ளனர் இளைஞர் உலகின் வளர்ச்சி உங்கள் கையில் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டது நினைவிருக்கிறதுதானே. எனவே விடயங்களையும் அபிப்பிராயங்களையும் எழுதுங்கள்.

—சோதரன்

## விவாத மேடை இல. (1)

விவாதமேடை இல. 1இல் நன்கைபேரே அதிகம் பங்குகொண்டனர். பங்குகொண்ட அனைவருக்கும் இளைஞர் உலகின் பாராட்டுக்கள் உரியதாகுக. எமக்குக் கிடைத்த விடைகள் எல்லாவற்றையும் அப்படியே பிரசுரிப்பதானால் நான்கு முறைகளுக்கு இளைஞர் உலகில் வேறு விடயங்களை வெளியிட முடியாது. எனவே முக்கியமான கருத்துகளை மட்டும் தொகுத்துத் தருகிறோம்.

ஒரு நாட்டின் கலை, கலாச்சாரம பாரம்பரிய பண்பாடுகளைப் பேணிக் காத்துச் சமுதாயத்தைச் சீரிய வழியில் நடத்தவந்த சினிமா இன்று ஆபாசக் காட்சிகள் நிறைந்து வாலிப உலகைத் தப்பான பாதையில் இட்டுச்செல்லுகின்றது. நடிகர்களும் தயாரிப்பாளர்களும் லட்சாதிபதிகளாவதே இன்றைய சினிமாவின் நோக்கு எனவே இது தீங்கானது.

—அ. அருள்ராசா

ஏனைய நாட்டுக் கலை கலாச்சாரம் பண்பாடு என்பவற்றை அறியவும் அந்நாட்டு இயற்கைக் காட்சிகளைக் கண்டின்புறவும் விஞ்ஞான விளைவுகள், சரித்திரம் என்பவற்றை கண்டுணரவும் வழிசெய்கிறது. இவற்றை நாம அந்தந்த இடங்களுக்குச் சென்று பார்ப்பதானால பெரும் பொருட்செலவாகும். இதை நிவர்த்தி செய்கிறது சினிமா. எனவே சினிமா எல்லோருக்கும் நன்மை பயப்பதாகிறது.

—செல்வி பியோறு பத்மநாதர், அளவெட்டி.

இன்றைய இளைஞர் நாளைய மேதைகளாகவோ மகான்களாகவோ உருவாகி நாட்டிற்கு நற்புகழும் பெருமையும் தேடித்தர வேண்டும், இதனையே வாழ்க்கையின் நோக்காகக் கொள்ளவேண்டிய இளைஞர் இன்றைய சினிமாவால் தவறான வழியில் நடத்திச் செல்லப்படுகின்றனர். அடிக்கடி பார்க்கும் நோக்குடன் திருடவும் துணிகின்றனர். ஆகவே இது தின்மையான தொன்றாகும்.

—செல்வி ஜெசிஸ்டா பர்னன்டோ, கொழும்பு,

சினிமாவால் ஏற்படும் நன்மைகள் அதிகமானவை. வாழ்க்கையில் தவறியவர்களும் தவறு இருந்தவர்களும் சினிமாவால் திருந்தியுள்ளனர். அதுவும் வருங்கால உலகை ஆள இருக்கும் இளைஞர் சமுதாயத்திற்குச் சினிமா மிகமிக ஏற்றதாகும். அன்பு, நேர்மை, கடமை, தியாகம், வீரம் போன்றவற்றைக் கொடுக்கும் சினிமா இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு கலங்கரை விளக்கு.

—ஈழச் செல்வி மிருசுவில்.

இளைஞர் சமுதாயத்தை சீரழியச் செய்யும் தீய சாதனங்களுள் இன்றைய சினிமா முக்கிய இடம்பெறுகிறது. அறிவு என்னும் வெண்முகிலை ஆபாசம் என்னும் கருமுகில் மூடி மறைக்கிறது. பண்பாட்டிற்கு வேண்டாத காதற் காட்சிகளும் உடலழகை வெளிப்படுத்தும் உதவா உடைகளும் இன்றைய சினிமாவை விஷமாகச் செய்கின்றன. நற் பிரசைகளாக வாழத்துடிக்கும் இளைஞருக்கு சினிமா அறவே கூடாது.

—செல்வி லூட்ஸ் அந்தோனிப்பிள்ளை, நெடுந்தீவு

சமயரீதியான சினிமாப் படங்கள் இளைஞர் சமுதாயத்தில் புதியதோர் மாற்றத்தை உண்டுபண்ணி காட்சிகளும் அவர்களுக்கும் அதிக நன்மையை உண்டாக்குகின்றன. ஆகவே இளைஞர் சமுதாயம் சினிமா பார்த்தல் நன்மை பயக்கக்கூடியதாகும்.

—செல்வி ம. அருளு, காரைநகர்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற் குணங்களையும் இழந்து அரைகுறை ஆடையுடன் வாலிபரை காதல் வலையில் சிக்கவைக்கவும் பெற்றோர்க்கு அடங்காது கண்டபடி காட்சி கொண்டதே கோலம் என்ற நோக்குடன் கன்னிப் பெண்கள் அலைவதற்கும், கோயிலேது? தெய்வமேது? என்று வாய்க்கு வந்தபடி இளைஞர் பிதற்றித் திரிவதற்கும் காரணம் இன்றைய சீர்கெட்ட சினிமாவே.

—செல்வி இராக்கினிதேவி, உடுவில்.

காதல், களவு, கொலை, சண்டை, கற்பழிப்புப் போன்ற பாதகச் செயல்கள் இளைஞர் உள்ளத்தில் பசுமரத்தாணி போற் பதிந்துவிடுகின்றன. சிந்தனை அலைகள் சிறகடித்துப் பறக்கும்போது அவர்களும் இவற்றைச் செய்ய முற்படுகின்றனர், எனவே சினிமா இளைஞருக்குத் தீங்கு விளைக்கிறது.

— செல்வி பி. மேரீஸ்வரி, நெடுந்தீவு.

தீமை என்பதை ஆதாரம் காட்டி அ. ஹெறபேட், புத்தளம்., யோ. செபமாலை, முல்லைத் தீவு ஆகியோரும் எழுதியுள்ளனர். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள். விவாத மேடை இல. 2இன் களத்தில் குதியுங்கள்.

## விவாத மேடை இல. (2)

### இளம் பெண்கள் உத்தியோகம் பார்ப்பது சரியா? தவறு?

இதுபற்றி சரி என்று கருதுபவர்கள் அதற்குரிய கருத்துகளையும் தவறு என்று கருதுபவர்கள் அதற்குரிய காரணங்களையும் எழுதி அனுப்ப வேண்டும். விடயங்களை மிகவும் சுருக்கமாக தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி இளைஞர் உலகு, காவலன் அலுவலகம், மேற்றிராணியார் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## உங்களால் முடியுமா?

1. இரண்டு தகப்பன்மார்களும இரண்டு பிள்ளைகளுமாக வேட்டையாடச் சென்றார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தாராவைச் சுட்டார்கள். ஆனால் ஒருவர் சுட்டதை மற்றவர் சுடவில்லை. ஆனால் சுடப்பட்ட தாராக்களின் தொகை நான்குக்குப் பதிலாக மூன்றே இருந்தது. இது எப்படி என்று உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

2. ஓர் அரசன் தனது அரண்மனையில் பணிபுரிந்த முதன் மந்திரியில் அதிருப்திகொண்டு அவரைப் பதவியில் இருந்து நீக்க முடிவுகட்டினார். அரசன் செய்த முடிவு இதுவாகும். இரண்டு சிறிய காகிதங்களில், ஒன்றில் "போகலாம்" என்றும், மற்றதில் "இருக்கலாம்" என்றும் தான் எழுதி வைத்திருப்பதாகவும் இதில் எதை முதன்மந்திரி முதலில் எடுக்கிறாரோ அதன்படி நடக்கவேண்டும் என்று நீதிபதிக்குக் கூறினார் அரசன். ஆனால் உண்மையில் அரசன் இரண்டு காகிதங்களிலும் "போகலாம்" என்றே எழுதியிருந்தார். இருந்தாலும் சமயோசித புத்தி உள்ள மந்திரி அரசனின் இந்தச் சூழ்ச்சியில் இருந்து தப்பிக்கொண்டார். அவர் செய்தது சரியானது என நீதிபதி தீர்ப்பளித்தார். எப்படி முதன்மந்திரி அரசனை ஏமாற்றினார்.

● விடை அடுத்த இளைஞர் இதழில்.

## சிரித்தமுகம் வேண்டுமடி பெண்ணே!



புன்னகை மனிதருக்குக் கொடுக்கப்பட்டுள்ள செல்வங்களுள் முக்கியமானதாகும். அழகிய பறவைகள் பல இருக்கின்றன. வீரமிகு விலங்குகள் பல இருக்கின்றன. ஆனால் அவைகளுக்கோ இத்தக் கொடை வழங்கப்படவில்லை. மனிதன் ஒருவனே இதற்குரியவனாய் வாழ்கின்றான்.

நம்மிற் பலரும் இதனைப் பயன்படுத்தத் தவறிவிடுகிறோம். இன்பமும் துன்பமும் சகடக்கால் போன்று எம் வாழ்க்கையில் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன, ஆனால் நாமோ இன்பத்தில் இன்புறுகின்றோம். துன்பத்தில் துவண்டு துடிக்கிறோம். எல்லாம் எமக்குத்தான் என்பதை மறந்து வாழ்கிறோம், இதனையே வள்ளுவப் பெருந்தகையும் "இடுக்கண் வருங்கால் நகுக" எனறு கூறிப் போந்தார்.

இதனைவிடுத்து நம்மில்பலரும் முகத்தைத் தூக்கி வைத்தநிலையில் வாழ்கிறோம். சிலரின் முகத்தில் இந்தப் புன்னகை என்னும் இன்னமுதை ஒருபோதுமே காண முடியாது. இதனால் அவர்களின் முகமே விகாரமடைந்திருக்கும். ஆம் நாம் சிரிக்க வேண்டும். வாழ்வு சிறக்கச் சிரிக்கவேண்டும். புதுமைப் பொலிவுடன் வாழ புன்னகை பூக்கவேண்டும். அந்த நகையும் பெண்களை அழகுபடுத்தலாம்; ஆனால் இந்தப் புன்னகை என்னும் ஆபரணத்தைப் பெண்கள் அணியாவிட்டால் அந்தப் பொன் நகைகள் அவர்களுக்கு அழகைக் கொடுக்கமாட்டாது. எனவே வாழ்க்கை சிறப்புற புன்னகை சிந்துங்கள். முகம் மலரும்; உளம்குளிரும்; வாழ்வு வளம்பெறும்.

—திராட்சையூரான்

## உன் பேச்சு... இப்படியா!

பணிவோடு பேசு. சரியெனப்பட்டதை நன்கு யோசனை செய்து பார்த்தபின் துணிவோடு பேசு. பிறர் பேசுவதைக் கூர்ந்து கேள். அவர் பேசி முடித்தபின் நீ பேசு. ஒருவர் பேசும்போது குறுக்கிட்டுப் பேசுவது மரியாதைக்குறைவு. பெரியோரிடம் பேசுகிறோமா சிறியோரிடம் பேசுகிறோமா என்று பார்த்துப்பேசு. பெரியோரிடம் பேசும்போது அதிகமாகப் பேசாதே. உரக்கப் பேசாதே. அமைதியாக நிறுத்தி படபடப்பின்றிப் பேசு. முகத்தைப் பார்த்துப் பேசு. முறைப்பதுபோல் கண்களை வைத்துப் பேசாதே. உன் இதயத்திலிருந்து நீ பேசும் பேச்சு அடுத்தவர்களின் இதயத்தைத் தொடும், நம் குறைபாடுகளையும் எமது பேச்சு காட்டுகிறது. ஆர்வமுள்ளவன் பணிவுள்ளவன் என்று ஒருவனின் பேச்சால் அறியலாம.

—பேச்சாளன்

## நாக்கில் நான்கு!

மனித நாக்கை நான்கு வகையாகப் பிரிக்கலாம். நாக்கின் நுனிப்பாகம் இனிப்பை உணருகிறது. அடி நாக்கு கசப்பை உணருகிறது. நாக்கின் பக்கவாட்டு முற்பகுதி உப்பை உணருகிறது. பிற்பகுதி புளிப்பை உணருகிறது. உமிழ்நீருடன் உணவுப்பண்டம் கரைந்துவிடுவதால் உடனே நாம் சுவையை அறிந்துவிடுகிறோம். நாக்கின் எப்பகுதி எதைச் சுவைப்பதில்லை என்பதைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. நாக்கும் மூக்கும் சேர்ந்துதான் ருசியை உணர்கிறது. இதனை அநேகமானோர் தெரிந்துகொள்வதில்லை. இதனால்தான் சளிபிடித்துக்கொண்டால்சில ருசிகளை உணர முடிவதில்லை. நாக்கின் அமைப்பின்படி சுவைகள் நான்குதான் ஏனைய சுவைகள இந்த நான்கிலும் இருந்தே பிறக்கின்றன.

—இளவாலை இளவல்

# சிலுவையின் வழி சீவியம்

## தவக் காலத்துக்குரிய புதிய சிந்தனைகள்

— எஸ். எம். ஜே. —

(முன் தொடர்ச்சி)

### சிந்தனை 9

**மூன்றும் முறையாக யேசு சிலுவையின் கீழ் விழுகிருர்**

தீய சோதனைகளின் சுமையின் கீழ் அழுந்துவோர் பலர். அவர்கள் எழுந்திருக்க நான் உதவும் ஊன்றுகோலாகின்றேனு?

அன்றேல் அவர்களை இகழ்கின்றேனு?

அவர்கள் தீயோர் என்று தீர்ப்பிடுகின்றேனு?

தீர்ப்பிடுவது இறைவன் செயலல்லவா?

காலா திகாலத்திற்கும் மாருத மாசு கற்பிக்கும் குற்றங்களைப் புரிதல் எவ்வளவோ எளிது.

ஆயினும், பிறர் செயல்களில்பிழை கண்டும் பிறருடன் வாழ்வேனுக.

*அயலவன் குற்றவாளியாயினும், அவனுக்கு அன்பு செய்யும் அருள் தாராய் இறைவா!*

### சிந்தனை 10

**ஆண்டவன் யேசுவின் ஆடைகளை அகற்றுகின்றனர்**

பட்ட அடிகளினுல் ஏற்பட்ட புண்கள்; அதில் ஒட்டிக் காய்ந்திருந்தது அவரது ஆடை; அது இழுத்து உரியப்படுகையில், ஆருப் புண்கள் அகல விரிகின்றன.

என் ஆத்துமாவே!

இதுவே உன் சரீர இச்சையினுல் நீ கிறீஸ்துவுக்களித்த சன்மானம்.

அடக்கமின்மை, ஆடம்பரம், ஆபாசம், இழிந்த வாழ்க்கை, சனநடத்தை, உல்லாசப் பிரியம் இவற்றில் எக் குற்றத்தில் நீ ஊன்றித் திளைத்திருக்கின்ருய்.

*இறைவா!*

*கற்பொழுக்கத்தைக் கண்ணியமாய்க் கடைப்பிடிக்க கருணை கூராய்.*

### சிந்தனை 11

**சிலுவையில் யேசு அறையப்படுகிருர்**

ஆசீர் அருளி அபயமளித்த கரங்கள்;

குஷ்டரோகிக்கு குணமளித்த கரங்கள்;

குருடருக்கு ஒளி கொடுத்த கரங்கள்;

மனமாறிய பாவியை மன்னித்த கரங்கள்;

அன்பினுல் அனைவரையும் அரவணைத்த கரங்கள்;

அந்தோ! அவற்றிற்குக் கிடைத்த பரிசு,

கூரிருப்பு ஆணிகளோ!

கருணை வழங்க காடும் மேடும் கடந்த பாதங்கள்

பாவியைத் தேடி பறைத் தலைந்து புண்ணுன பாதங்கள்;

நன்மையே செய்ய நாடெல்லாம் நடந்த பாதங்கள்;

இவைக்குக் கிடைத்த சன்மானம்,

கொடிய ஆணிகளோ!

பொல்லாதவனெனும் போதும், புகழப்படாத போதும் நான் கவலைப்படுவது ஏனோ? பிறர் போற்றப்படும்போதும், புகழப்படும்போதும், நான் பொருமைப்படுவதும் ஏனோ?

சிலுவையில் தொங்கும் சிவனைப் பார்!

போற்றப்பட வேண்டியவர் போற்றப்பட்டாரா?

புகழப்பட வேண்டியவர் புகழப்பட்டாரா?

*துன்பமெது வரினும் என் பிறனைப் போற்றிப் புகழும் வரமருள்வாய் இறைவா!*

### சிந்தனை 12

**சிலுவையில் யேசு பலியாகிருர்**

சிலுவையில் யேசு மூம் மணிநேரம்.

அவர் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளோ,

அன்பின் அருள்மொழியன்றி வேறில்லை.

துன்பவேளையிலும் அன்பு மொழிகளோ!

தகிக்கும் வெய்யிலிலும் தாக மொழிகளோ!

அந்தரித்த வேளையிலும் அருள் மொழிகளோ!

கடைசி வேளையிலும் கருணை மொழிகளோ!

மரிக்கும் வேளையிலும் மதுர மொழிகளோ!

நான் என் உள்ளத்தை உற்றுப்பார்த்தால் ......

அன்பனே! எவ்வளவு வித்தியாசம்!

ஒப்பிட்டுப்பார் ........

உன் உள்ளத்தை அவர் உள்ளத்துடன்.

*இறைவா!*

*எங்கு துன்பமுள்ளதோ, என் உயிரைக் கொடுத்தேனும் அங்கு இன்பமளிக்க எனக்கு வரமருள்வாய்.*

### சிந்தனை 13

**வியாகுலமரியின் மடியில் மரித்த மைந்தன் யேசு**

மெல்லியலாள் மரியாளே மாதருள் வீரமங்கை.

அவள் மௌன துயர சிந்தையை சிலையாக்கக்கூடுமாஞல், அதற்கு நிகரான மனோபாவம், மதுர அன்பு, துயர சிந்தையுடைய வேருேர் பெண்ணுருவைக் காணவும் முடியுமா!

*எனது அன்ருட சீவியத்தின் துன்ப துயரமோ அம்மம்மா! சொல்லும்தரமன்று. ஆயினும் அவைகளை மனநிறைவுடன் ஏற்று, மகிழ்வுடன் வாழும் வரமருள்வாய் துயரமே உருவான தூய அம்மா.*

### சிந்தனை 14

**கல்லறையில் யேசுவின் உயிரற்ற உடல்**

அயலவர்கள் துயர் களைந்த புனிதர்கள்;

உன்மத்தரை உத்தமராக்கிய இனியபுனிதர்கள்;

புண்ணியத்தின் எழிலுக்கும் கவர்ச்சிக்கும் உருவம் தந்து உயிரூட்டிய புனிதர்கள்;

கிறிஸ்துவின் அன்பு பலரையும் ஈர்க்கத் துணைநின்ற புனிதர்கள்.

கிறிஸ்துவின் அன்பை, மன்னிப்பை மதுரத்தன்மையை அவரின் தயாளகுணத்தை, வாழ்ந்துகாட்டிய புனிதர்கள்.

சாவு என்னை வாவென்றழைக்கும்போது,

நானும் இப்புனிதர் போன்றிருப்பேனு?

இவர்கள் வாழ்வு எனக்கு வழிகாட்டட்டும்.

நானும் கிறிஸ்துவாவேன்.

### சிந்தனை 15

**மரித்த யேசு உயிர்க்கிருர்**

கிறிஸ்துவின் உயிரற்ற உடலை மண் தீண்டவில்லை.

படைத்தவரை அது பகைக்கவில்லை.

சாவை வென்ற சத்தியன்,

உரைத்தபடியே உத்தானமாகின்ருர்.

நானே ஒளி: நானே வழி; நானே உத்தானம் என்ற உண்மை உரைக்கு உயிர் கொடுக்கின்ருர்.

கோதுமைமணி நிலத்தில் விழுந்து மடிந்தாலொழிய, அது பலன் கொடாது.

சத்தியத்திற்குச் சான்று பகர்வோனுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி, அழிக்கப்படுவதில்லை;

உண்மையற்ற உலகை, உடலை, ஊழியை வென்ருலொழிய சத்தியத்திற்குச் சான்று பகர்ந்து கிறீஸ்துவாகி, மகிமை பெருமை பெறமுடியாது.

—முற்றிற்று—

---

மரியான் வேதநாயகம் அவர்களின்

## 9-ம் வருட ஞாபகம்

சுவாமி, பாதாளத்தில் நின்று உம்மைக் கூப்பிடுகிறேன்; என் சத்தத்தைக் கேட்டருளும்.

| தோற்றம் : | மறைவு : |
|---|---|
| 19-4-1943 | 16-3-1962 |

மிகவும் மதுர யேசுவே, நீர் அநுபவித்த கொடிய வேதனைகளைப் பார்த்து, மரியான் வேதநாயகத்துடைய ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது.

எங்களைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமலன் பதஞ்சேர்ந்த 9ஆம் ஆண்டு நிறைவுதினம் இம் மாதம் 16-ந்தேதி. அன்று நெடுந்தீவு ஆசனக்கோவிலில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரை இழந்து துயருறும்: தகப்பன், தாய், சகோதரர்கள், மைத்துனர், மைத்துனி, மருமக்கள், பிள்ளைகள்.

41-71

---

### நன்றித் துதி

திவ்விய யேசுவின் இரக்கத்தினுலும், பரி. மருதமடுமாதாவின் வேண்டுதலாலும் நான் பலமுறை முயன்றும் தோல்வியடைந்த சோதனையில் சித்தியெய்துள்ளேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியான்

காங்கேசன்துறை 38-71

---

## விற்பனைக்கான பாடற் புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| இசை அமுதம்— இசைக்குறிப்புடன் | 1-ம் பாகம் | 5—50 |
| ,, ,, | 2-ம் ,, | 6—50 |
| ,, பாடற்பகுதி — சொற்கள் மாத்திரம் | | 3—00 |
| மக்களோடு ஒப்புக்கொடுக்கும் திருப்பலி முறை | | |
| குருவின் பகுதி — இசைக்குறிப்புடன் | 1-ம் பாகம் | 3—00 |
| ,, ,, | 2-ம் ,, | 3—00 |
| ,, ,, | 3-ம் ,, | 4—00 |
| புனித சூசையப்பர் பாடற்பூசை — இசைக் குறிப்புடன் | | —60 |
| கிறீஸ்து அரசர் ,, ,, | | —50 |
| இறந்தோர்க்கான ,, ,, | | —50 |

இப் புத்தகங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்.

The Director,
Diocesan Catechetical Centre,
Bishop's House, Kandy.

---

மனுவேல்பிள்ளை சேபஸ்தியாம்பிள்ளை இம்மனுவேல் அவர்களின்

## 10-ம் வருட மரண ஞாபகம்

20—3—1961

"மரித்தோருக்காகப் பிரார்த்திப்பது பரிசுத்தமும், பிரயோசனமுமான யோசனை" (2ஆம் மக்கபேயர் 12:46)

விலையினிலே மதிப்பறியா
வைரம்போல
மினுமினுக்கும் சிறந்தகுண
விளக்கே! தந்தாய்!
உலையினிலே அரிசியைப்போல்
உள்ளம் வேக
பத்தாண்டாய்க் கண்ணருவி
ஊற்றுகின்ருேம்.
அலையினிலே தனிப்பட்ட
துரும்பேயாகி
அல்லலுறும் எம்மரிய
தாயார் சோக
நிலையிலா உடம்பதனை
நீத்தாய்! எங்கள்
நெஞ்சினிலே நின்றென்றும்
நீங்காயன்ருே!

"சீவியத்தில் இவரை நாம் நேசித்தோம்; நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இவரை நாம் இட்டுச் செல்லும் வரை கைவிடாதிருப்போமாக."

"நித்திய இளைப்பாற்றியை இவருக்குத் தந்தருளும்; முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது."

**மனைவி, மக்கள், மருமக்கள்.**

சில்லாலை

---

எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் மனதைவிட்டு
என்றுமே பிரிக்கவியலாத

**அந்தோனிமுத்து இம்மானுவேல் நட்சேத்திரம்**

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 25—5—1924 | 19—3—1970 |

அமரத்துவமெய்திய

## முதல் வருட ஞாபகம்

19—3—71

அன்னரின் ஆன்மசாந்திக்காக 20-3-71 காலை மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் இவரை மறவாதிர்கள்.

மனைவி, பெற்றேர், உறவினர்.

மாதகல்

---

திரு. என். எஸ். தம்பு அவர்களின்

## 2-ம் வருட மரண நினைவு

14—3—69

"நீர் மறைந்து ஈராண்டு
இறகினிலே பறந்திடினும்
சிந்தைதனில் நிலமிடம்
மறைந்திரில்லை
நின் பிரிவின் வேதனைதான்
திருமுன்னே
தலையினையும் தாளமைத்த
மர்மமென்னே?"

இன்பத்திலும், துன்பத்திலும் எம் நலங்காப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து இவ்வுலகைவிட்டு அகன்றும் எங்கள் மனதினின்று அகலாத என் நேசப்பத்தாவும், அருமைத் தந்தையுமாகிய திரு. என். எஸ். தம்பு அவர்கள் அமரபதமடைந்த 2-ம்வருட ஞாபகமாக ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கோவிலிலும், கொழும்பு டி- லா- சால் மடத்திலும், காளுட்டானிலும் திவ்விய பூசைப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் நீங்கவரும் அன்னரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்ருடும்படி தயையுடன் கேட்டுக் கொள்ளுகிருேம்.

துயருறும்: மனைவி, மக்கள்.

36-71

---

யாக்கோபு ஞேமான் அவர்களின்

## 4ஆம் வருட ஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 2-9-1906 | 13-3-1967. |

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்; உயிர் பெற்று என்னில் விசுவாசங் கொள்பவன் ஒருபோதும் சாகான்" (அரு. 11: 25—26)

எங்கள் மத்தியில் மங்காத தீபம்போல் பிரகாசித்த நேசப்பத்தாவும், அன்புத் தந்தையுமான யாக்கோபு ஞேமான் பாமன் திருவடி நிழலெய்திய 4-ம் வருடம் இத்திகதி 15ஆம்நாள் சனிக்கிழமை பூர்த்தியாகிறபடியால், இதைக் கண்ணுறும் சகலரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக மன்ருடத் தயவாய் வேண்டுகிருேம்.

துயருறும்: மனைவி, மக்கள்.

37-71

# மரணத்தையும் உயிர்ப்பையும்

கிறிஸ்துவில் மரணிக்கிறவன் கிறிஸ்துவில் உயிர்ப்பான். "சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வோம்", இதையே புனித பவுல் எல்லோரிடமும் வேண்டுகிறார். தேவனில் நாம் சீவிக்க வேணுமானால் யேசுவில் மரிக்க வேண்டும். யேசுவில் எப்படி நாம் மரிப்போம்? அவர் பூங்காவனத்தில் பட்ட மரண வேதனையைச் சிந்திப்போம். தம் பாடுகளை ஆரம்பிக்குமுன் நம் ஆண்டவராகிய யேசு செபஞ்செய்ய மூன்று அப்போஸ்தலர்களைக் கூட்டிக் கொண்டுபோனார். யேசு தேவன் மெய். அவரில் அவர் பிதா சம்பூரணமாக இருக்கிறார். யேசு அவதாரமான தேவன். அவர் தமது தெய்வீகத்தை வெறுமையாக்கினார். அவர் மாமிசமானார். மாமிசத்தின் சகல தோஷங்களையும் தன்மேல் சுமந்து அவைகளுக்குப் பரிகாரஞ் செய்யச் சித்தமானார். அவருடைய பாடுகளின் பெறுபேறுகளே சகல மனிதருடைய ஒரே நம்பிக்கையின் காரணம். தமது பிதாவின் உன்னத பரிசுத்தத்தின்முன் சகல பாவங்களின் பாவச் சுமையுடனும் யேசு பூங்காவனத்தில் நின்றார். எப்படிச் சூரியனானது தனது உச்சத்தில் நிற்கும்பொழுது சகல இருளையும் தனது பிரகாசத்தால் போக்குகிறதோ அதேபோல் யேசுவின் பயத்தாலும், சிந்தின வெயர்வையாலும், இரத்தத்தாலும், அவருடைய நடுநடுக்கத்தாலும், அவருடைய உள்ளமும் உடலும் நொறுங்குண்டதாலும் சகல பாவ இருளையும் அதன் தோஷத்தையும் நித்திய தூய்மையாகிய தேவன் போக்கினார். எப்படி யேசுவில் விசுவாசங்கொண்ட எந்தப் பாவியும் பூரண நம்பிக்கை பெறாது இருப்பான்? எப்படி மனம் வருந்தாது இருப்பான்? எப்படி பரிகாரம் செய்யாது இருப்பான்? எப்படி நன்றியில்லாது இருப்பான்? மரியாளின் அழைத்தலில் நாம் கனிகூர வேண்டுமானால் யேசுவினதும் மரியாளினதும் வியாகுலத்தில் பங்குபெற வேண்டும்.

## நமது பிறப்பு விரும்பத்தக்கதா?

"இதோ மனிதனைப் பாருங்கள்" என்று பிலாத்து யேசுவைக் காட்டி யூதர்களின் மனதை இளகச்செய்ய முயன்றான். அவரில் குற்றமொன்றையும் பிலாத்து காணவில்லை. ஆனால் அவன் பதவிமோகம் பிடித்தவன் யேசுவின் பரிதாப நிலையால் யூதர் மனம் இளகும் என நம்பினான். அவர்களின் மனம் இளகவில்லை. பிலாத்து ஏமாற்றமடைந்தான். எப்படி மனித ஈடேற்றத்திற்குப் பலிப்பொருளும் குருவுமாய் அவதரித்த யேசு தமது மாமிசத்தை பலிபீடத்தில் அளியாதுவிடுவார். பிலாத்தும் யூதர்களும் நித்திய அன்பரின் கருத்தை நிறைவேற்றினார்கள். ஆனால் இது யூதாஸின் ஒத்துழைப்பைப்போல் தான் இருக்கிறது. இவர்களுக்கும் யூதாஸைப் பற்றி யேசு சொன்ன தீர்ப்பைத் தான் நாம் சொல்ல வேண்டும். "அவன் பிறவாதிருந்திருந்தால் உத்தமமாயிருக்கும்." இவர்களே தூய ஆவியுடன் சதா போர்செய்யும் அசுத்த அரூபியின் மக்கள். இவர்களே தங்கள் உள்ளங்களில் பரிசுத்த ஆவியின் ஆட்சிக்கு இடமளிக்காதவர்கள். எப்படி யேசுவின் சாயலாய் சீவிக்கும் கிறிஸ்தவன் யேசுவோடு தனது மாமிசத்தைக் காணிக்கையாக வையாது இருக்கக் கூடும்? எப்படி யேசுவின் உத்தானத்தையும் அவரின் மகிமையையும் நித்தியத்தில் எதிர்பார்க்கும் கிறிஸ்தவன் யேசுவில் மரியாதிருக்கக் கூடும்? எப்படி யேசுவின் சாட்டைகளால் அடிபடாதவன் யேசுவுக்குச் சாட்சியாக வரமுடியும்? நமது பிறப்பு கடவுளுக்கு விருப்பத்தக்கதா?

(பி. ஜே. அமிர்தநாயகம்)

## யேசு நமது வழியாக இருக்கிறாரா?

யேசு நமது வாழ்வும் வழியும் என்று போதித்தார். அவரின் போதனையால் சீவிக்கும் கிறிஸ்தவனே யேசு காட்டினவழியே செல்கிறான். அவருடைய வழியில் அவரின் ஆவியே நம்மைக் கொண்டு செல்ல முடியும். அது யேசுவின் சிலுவைப்பாதையாய் இருந்தாலும் நித்திய அன்பரோடுதான் நாம் செல்லுகிறோம். அவரே எங்கள் ஒளியாயும், பெலனும், ஆனந்தமாயும் இருக்கிறார். "To live is Christ" என்று புனிதர் பவுல் அழகாகக் கூறுகிறார். கிறிஸ்து மயமாகிறவன் மாத்திரமே சீவிக்கிறான். மற்றனைவரும் தங்களை ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். சீவிப்பதுபோல் தோன்றியும் சீவியத்தை இழந்து மரண நிழலில் இருக்கிறார்கள். நித்திய வாழ்வாகிய தேவனின் ஆவி நம்மை உந்தாவிட்டால் எப்படிச் சீவிக்கிறேன் என்று நாம் சொல்லக்கூடும்? கிறிஸ்துவின் மகிமையை எதிர்பார்க்கும் கிறிஸ்தவன் எப்படி அவரின் மரணத்தைத் தனது நாளாந்த சீவியத்தில் அறிக்கையிடாது இருக்கக்கூடும்? கடமைகள் இல்லாத உரிமைகள் யாரும் பெற்றிருக்கிறார்களா? பெற்றார் என்னும் பெருமை பிள்ளைகள்போல் சீவிப்பவர்களுக்கே. அரசனின் ஆட்சிக்குள் அடங்கினவர்களே பிரஜைகளின் உரிமைகள் உள்ளவர்கள். பிரஜைகளுக்கு அரசனின் ஆட்சி பெருமையாக இருக்கவேண்டும். தேவனின் இராட்சியத்தைத் தேடுபவர்கள் சிலுவையில் அறையுண்ட தேவமகனைத் தங்கள் உள்ளங்களிலும் உடலிலும் சமூக சீவியத்திலும் தரித்துக்கொள்ள வேண்டும்.

## கிறிஸ்து உத்தானமானார்

மனிதன் மரிக்கிறது போதாது. அவன் கிறிஸ்துவில் மரிக்கவேண்டும். கிறிஸ்துவில் உத்தானமாகவேண்டும். கிறிஸ்துவின் உத்தான மகிழ்ச்சிக்குச் சாட்சியாக வேண்டும். சமூகத்தில் சீவிக்கும் மனிதன் எப்படி கிறிஸ்துவின் உத்தானத்தை அறிக்கையிடலாம்? அவன் கிறிஸ்துவுக்கு வழிகாட்டியாகவேண்டும். சகல மனிதருடைய உடல் உள நன்மைகளுக்காக இடைவிடாது உழைக்கவேண்டும். சமூக முன்னேற்றச் சேவைகளில் ஈடுபட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தான் கடவுளிடமிருந்து பெற்ற சகல சம்பாத்தியங்களையும் ஆண்டவரின் சேவைக்கு காணிக்கை வைக்கவேண்டும். அது உலக பொருட்களாய் இருக்கலாம்; ஞானச் செல்வங்களாய் இருக்கலாம். இவை அனைத்தையும் ஆண்டவன் சேவையில் அளிப்பவனே நூறுமடங்கு பலனைப் பெறுவான். அவன் ஒரு தொழிலாளியாய் இருக்கலாம்; அன்றேல் முதலாளியாய் இருக்கலாம். ஓர் ஆசிரியையாக இருக்கலாம்; அன்றேல் மாணவனாக இருக்கலாம். ஒரு புனித குருவாய் இருக்கலாம்; அன்றேல் சீஷனாய் இருக்கலாம். இந்த தாராள தேவகாணிக்கையால் மரிக்கிறவனே கிறிஸ்துவில் மரணித்து கிறிஸ்துவோடு உத்தானமாகிறான். கிறிஸ்து வழி மாத்திரமல்ல அவரே வாழ்வுமாயிருக்கிறார். கிறிஸ்துவின் வழியாகிய சிலுவைப்பாதை நித்திய வாழ்வாகிய அவரின் உத்தானத்திலும் மகிமையிலும் சம்பூரணமடைகிறது.

## மரியாளை மறவோம்

கிறிஸ்து மரியாளை மறக்கவில்லை. நாமும் மரியாளை மறவோம். தாயிற் சிறந்த கோயில் இல்லை என்பது முதுமொழி. இது எவ்வளவும் சத்தியமாய்த்தான் இருக்கிறது. மரியாள் தேவனின் தாய். அதுமாத்திரமல்ல, அவள் எமது தாயுமாய் இருக்கிறாள்.

இயற்கை முறையிலே தேவன் தமது வல்லபத்தால் மரியாளின் பிள்ளையானார். இயற்கைக்கு மேலான முறையிலே யேசு நம்மெல்லாரையும் அதே வல்லபத்தால் அவளது பிள்ளைகளாக்கச் சித்தமானார். என்ன பாக்கியம்! கிறிஸ்தவன் ஒருபோதும் அனாதையாயில்லை. அவன் என்றும் பிதா மாதாவுடையவன். என்ன ஆனந்தம்! பரம ஆனந்தம் நிறைந்த பிதா மாதாவின் பிள்ளைகள் நாங்கள்! கிறிஸ்துவோடு சிலுவை அடியில் நின்ற மரியாளின் காட்சி முடிந்துவிட்டதா? இல்லை ஒருபோதும் இல்லை. மறை உடலின் சிரசாகிய யேசுவே பரமானந்தத்திலிருக்கிறார். அவரின் மறைஉடல் இன்னும் மண்ணுலகில் இருக்கிறது. அவரின் கல்வாரி இன்னும் நடக்கிறது. எப்படி மரியாளை அவரின் மறை உடலிலிருந்து பிரிக்கலாம்? கிறிஸ்துவின் மறை உடலே திருச்சபை. கிறிஸ்துவே அதனின் சிரசு. அவரின் ஞான அங்கங்களும் திராட்சைக் கிளைகளுமாகிய சகல கிறிஸ்தவர்களும் நித்தியத்தில் இளைப்பாற்றி அடைய வேண்டும். அதுமட்டும் திருச்சபையின் கல்வாரிக் காட்சி இருந்தே தீரவேண்டும். பிதா மாதாவில்லாது பிள்ளைகள் எப்படி இருக்கமுடியும்? அதேபோல் நித்திய சீவியமாகிய பிதாவின் நிறைவை அளித்த கிறிஸ்து அதற்குரிய மாதாவாகிய தனது தாயையும் எல்லோருக்கும் அளித்தார். கல்வாரியில் வாதுசிரசைப் பெற்றெடுத்த மரியாள் கண்ணீரின் நிறைவால் அவரின் மறைஉடலைப் பெற்றெடுத்தாள். மரியாளை என்றும் மறவோம்!

# யாழ். கொமிஸியக் கட்டுரைப் போட்டி

உலகில் மரியாயின் சேனை ஆரம்பமாகிய 50-ம் வருடப் பொன்விழா இவ்வருடம் புரட்டாதி மாதம் 7-ந் தேதி நிறைவுறுகிறது. இவ்விழாவின் சிறப்பம்சங்களில் ஒன்றாக யாழ்ப்பாணக் கொமிஸியம் ஒரு கட்டுரைப் போட்டியினை நடாத்தத் தீர்மானித்துள்ளது. இப்போட்டியில் சகல பொதுநிலையினரும் பங்குபற்றலாம்.

கட்டுரை விடயங்கள் :

(1) இக்கால உலகில் பொதுநிலையினரின் பணி
(2) சேனைப் பணியை நவீனமாக்கல்
(3) சேனை குருவின் வலக்கரம்

நிபந்தனைகள் :

1. தகுதி : சகல பொது நிலையினரும் பங்குபற்றலாம்.
2. கட்டுரை : ஒருவர் எத்தனை கட்டுரைகளும் எழுதலாம். ஆனால் ஒரு பொருள்பற்றி ஒரு கட்டுரை மாத்திரம் எழுதலாம். கட்டுரை மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கட்டுரை "புள்ஸ்காப்" காகிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படல்வேண்டும். 800 சொற்களுக்குக் குறையாமலும் 1000 சொற்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். கட்டுரை, எழுதுபவரின் சொந்தப் படைப்பாக இருக்கவேண்டும். வேறு நூல்களிலிருந்து முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ எடுத்து எழுதப்படக்கூடாது. அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டால் அவை நிராகரிக்கப்படும். அத்துடன் கட்டுரை எழுதுபவர் பின்வரும் மாதிரிப் படிவம் ஒன்று தயாரித்து ஒவ்வொரு கட்டுரையுடனும் இணைத்து அனுப்பவேண்டும்.

| | |
|---|---|
| கட்டுரை எழுதுபவரின் பெயர் : | |
| விலாசம் : | |
| கட்டுரை விடயம் : | |
| மாவட்டம் : | மாகாணம் : |

3. முடிவு திகதி ; கட்டுரைகள் யாவும் ஆனிமாதம் 30-ந் திகதி 1971ஆம் ஆண்டு பிந்தாமல் அனுப்பப்படல் வேண்டும்.
4. அனுப்பவேண்டிய விலாசம் : கட்டுரைகள் யாவும் நீளமான பெரிய காகித உறையிலிடப்பட்டு; அதன் இடது பக்க மேல் மூலையில் "யாழ். கொமிஸிய கட்டுரைப் போட்டி" என்று எழுதப்பட்டு, திரு. மோ. தார்சீசியஸ், யாழ். கொமிஸியச் செயலர், 180, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம் என்று விலாசமிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.
5. பரிசுகள் : மத்தியஸ்தர் குழுவினால் தெரிந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகளுக்குப் பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | ரூ. 50-00 | 5-ம் பரிசு | ரூ. 10-00 |
| 2-ம் ,, | ரூ. 40-00 | 6-ம் ,, | புதிய ஏற்பாடு |
| 3-ம் ,, | ரூ. 30-00 | 7-ம் ,, | சங்க ஏடுகள் |
| 4-ம் ,, | ரூ. 20-00 | 8-ம் ,, | சேனைக்கைப்புத்தகம் |

6. பரிசளிப்பு : பரிசுகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் மரியாயின் சேனைப் பொன்விழா இறுதி நாள் நிகழ்ச்சியின்போது வழங்கப்படும்.

---

● வருகிற ஆடி மாதம் ஆரம்பமாகும் தனது புதிய நிதிவருடத்திற்கான வரவுசெலவுத் திட்டத்திலே அமெரிக்க அரசாங்கம் பாதுகாப்புக்கென்று இதுவரையிலும் அதிகம் கூடுதலான பணம் ஒதுக்கியிருக்கிறது. இதற்குக் காரணம் ருஷ்யாவின் அணு ஆயுத, கடற்படைப் பெருக்கத்தைச் சமாளிப்பதேயாகும். அது அவ்வருடத்தில் 1,600 கோடி பவுண் கூடுதலாகச் செலவிடவிருக்கிறது.

● பிரித்தானிய அணுச்சக்தி நிறுவனம் சமுத்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் விளைவாகக் கடல்நீரிலிருந்து அணுச்சக்திக்குத் தேவைப்படும் யூரேனியத்தைப் பெறும் வழிவகையைக் கண்டுபிடித்திருக்கிறது. இதனை வர்த்தக ரீதியில் தயாரிப்பதற்கான முறைகள் சாத்தியமாகலாமென்று சொல்லப்படுகிறது.

● இப்போது நடந்துமுடிந்துள்ள இந்திய பொதுத்தேர்தலில் அந்நியர்பணம் சாதாரணமாய் உலாவவிடப்பட்டதாகவும், சில கம்யூனிஸ்ட் நாடுகள் ஏப்பா ஏப்பாவாகப் பணத்தை இறைத்துத் தள்ளியதாகவும், இதுபற்றி விசாரணை நடத்தப்படவேண்டுமென்றும் இந்திய ஸ்தாபன காங்கிரஸ்தலைவர் கூறியிருக்கின்றார்.

# செய்திகள்

## தொடர்ந்து அமெரிக்க உதவி

பொருளாதாரத் துறையிலே இலங்கை ஒரு பின் தங்கிய நாடாக இருக்கும்வரை அமெரிக்காவின் உதவி அதற்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும்; இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள நீண்டகால நட்புறவு தொடர்ந்து இருந்துவர வேண்டுமென்றே அமெரிக்கமக்கள் விரும்புகிறார்களென்று இலங்கையிலுள்ள அமெரிக்க தகவல்பகுதித் தலைவர் திரு. விக்டர் ஸ்ரையர் தெரிவித்திருக்கின்றார்.

## வடக்கில் எண்ணெய் வளம்

இலங்கையின் வடபகுதியிலே மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலுள்ள கடலை அண்டிய பகுதிகளில் சோவியத் நிபுணர்கள் இருவர் நிலத்துக்குக்கீழே 5,280 அடிவரையில் அகழ்ந்து குழாய்களை விட்டுப் பரிசோதனைசெய்து இங்குள்ள எண்ணெய் வளத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர். விசேடமாய்ப் பேசாலை, மன்னார், மன்னார்த்துறை, வாங்காலைத்துறை ஆகிய இடங்களில் பெருவாரியான எண்ணெய்வளம் இருப்பதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர். ஆனால், நன்கு பரிசீலனை செய்தபின் எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் வேலை ஆரம்பமாகும். பொதுவிலே இப்பகுதிகளில் 12கோடியே 60லட்சம் ரூபா பெறுமதியான எண்ணெய் உள்ளதாம்.

## வாடகை வீடுகள்

வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களை நீதிமன்ற உத்தரவின்றி வெளியேற்ற முடியாதென வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்திருக்கின்றார். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வீடில்லாப் பிரச்சினையைப் பயன்படுத்தி வாடகைக்கு வீடுகளைக்கொடுத்திருப்பவர்கள் குடியிருப்பவர்களை வீடுகளிலிருந்து வெளியேற்ற முயற்சிகள் எடுப்பதாகவும், அத்துமீறிய செயல்களில் ஈடுபடுவதாகவும் கிடைத்த முறையீடுகளைத் தொடர்ந்தே வடபகுதிப் பொலிஸ் அதிபர் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்.

## ஒரு சொல்லுக்குப் 15 சதம்

பாராளுமன்றத்தில் பேசப்படும் ஒவ்வொரு சொல்லுக்கும் 15சதம் செலவாகிறது. அதனால் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தங்கள் பேச்சைச் சுருக்கமாகவும், கருத்தாளமாகவும் நிகழ்த்துமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## ஒருவர் எத்தனை ஏக்கர்

ஒருவர் எத்தனை ஏக்கர்நிலம் வைத்திருக்கலாம் என்பதைச் சட்டரீதியாக வரையறுப்பது பற்றி அரசாங்கம் இப்போது ஆலோசித்து வருகிறது; அதனால் இலங்கையில் ஒருவர் வைத்திருக்கவேண்டிய நில உச்சவரம்பு வரலாமென்று சுகாதார மந்திரி திரு. ஆரியதாசா தெரிவித்திருக்கிறார்.

## கூட்டுத் தாபனங்கள்

அரசாங்க கூட்டுத்தாபனங்களை நிறுவுவதற்கெனக் கடந்த இருபது வருடங்களிலும 300 கோடிரூபா செலவிடப்பட்டுள்ளது; ஆனால், அவைகளால் அரசாங்கத்துக்கு இதுவரை ஒரு சதமும வருமானம கிடைக்கவில்லை; மீனபிடிக் கூட்டுத் தாபனமும், கல்லோயாத்திட்டமும இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகுமென்று நிதிமந்திரி டக்டர் என். எம். பெரேரா ஒரு கருத்தரங்கில் கூறியிருக்கின்றார்.

## சீனிக்கப்பல் வந்தது

9,500 தொன சீனியுடன் கப்பல் ஒன்று சென்றவெள்ளிக்கிழமை கொழும்புத்துறை முகமவந்து சேர்ந்தது. இந்தச் சீனி தீவிரமாக அதிலிருந்து இறக்கப்பட்டு அன்று முதல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழமைபோல வழங்கப்பட்டு வருகிறது.

## செயற்கைப் புடவை விலைக்கட்டுப்பாடு

உள்நாட்டில் நெசவு செய்யப்படும் செயற்கைப் புடவைகளின்விலை வருகிற சித்திரை மாதத்திலிருந்து கட்டுப்படுத்தப்படவிருக்கிறது. இப்புடவைகளின் கட்டுப்பாட்டுவிலை பற்றி இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## குழந்தைகளின் பால் மா

குழந்தைகளுக்குத் தேவைப்படும பால்மாவுக்கு இவ்வருடம் எவ்விததட்டும் ஏற்படமாட்டாதென்றும, வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தப்பால்மாவை இறக்குமதி செய்ய அரசாங்கம 1கோடியே 30லட்சம் ரூபா அந்நிய செலாவணி வழங்கியுள்ளது. இத்தொகை சென்றவருடத்திலும் சற்றே கூடியதாகும்.

## தமிழ்ச்சர்வகலாசாலை

வடபகுதியில் அமைக்கப்படவிருக்கும் தமிழ்ச்சர்வகலாசாலை நல்லூர்த தொகுதியிலே இடம்பெறுமெனச் சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தினு தெரிவித்திருக்கின்றார். அதனால் வடபகுதியிலுள்ள மாணவர்கள் தங்கள் சொந்த இடத்திலிருந்தே சர்வகலாசாலைக் கல்வியைக் கற்றுக்கொள்ள முடியுமென்றும் அவர் கூறியிருக்கின்றார்.

## விவசாயப் படையினரின் உண்ணாவிரதம்

முன்னாள் விவசாயப்படையினரான 1,500பேர் அன்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள 'சிற்றி லீக்'' வளவில் சாகும்வரை, உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தனர். காரணம், அவர்களுக்குத் திரும்பவும் வேலைவசதி அளிக்கப்படாமையே. ஆனால், இரண்டொருநாளில் அவர்கள் சமரசத்திற்குவந்து விவசாயப் படை கலைக்கப்பட்டு ஆறு மாத காலத்துள் திரும்பவும் வேலைவசதி வழங்கப்படுமென்று அரசாங்கம்கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்க வேண்டுமெனக் கேட்டு ஓர் அதிகாரிமூலம் பிரதமருக்கும், மந்திரிசபைக்கும மனுச் செய்வதென்ற முடிவுக்குவந்து தங்கள் விரதத்தை முடித்தார்கள்.

## புதிய அரிசிக்கூப்பன்

அடுத்தமுறை வழங்கப்படவிருக்கும் புதிய அரிசிக்கூப்பன்கள் இருபகுதிகளை அடக்கியதாயிருக்கும். ஒரு பகுதி இலவச அரிசிக்கும், மறுபகுதி பணம்கொடுத்து வாங்கப்படும் அரிசிக்குமாக இருக்கும்.

## அரிசிக் கூப்பன் புத்தகம்

ஒருவருடைய அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தை — அதாவது கூப்பன் புத்தகத்தை அதிகாரமற்ற முறையிலே மற்றொருவர் வைத்திருந்தால அவர்கள் அக்கூப்பன் வைத்திருப்பவராகவே கருதப்படுவார். கள்ளக்கூப்பன் வைத்திருப்பது குற்றமாகையால் அதை வைத்திருப்பவருக்குக் கடுந்தண்டனை விதிக்க அரசாங்கம் ஒரு சட்டம்கொண்டு வரவிருக்கிறது. அதன்படி, ஒருவருக்குச் சொந்தமான கூப்பனை மற்றொருவர் வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார். அல்லவென்று வைத்திருப்பவர் அரசாங்கத்திடம் அதற்கென அனுமதிபெற வேண்டும்.

## அதிபர் தலைமை ஆசிரியர் நியமனம்

நிரந்தரமான அதிபர், தலைமைஆசிரியர் இல்லாத பாடசாலைகளுக்கு வருகிற வைகாசி முதலாம திகதியிலிருந்து அவர்கள் நியமிக்கப்படுவார்களென உதவிக் கல்வி அமைச்சர் உறுதிவாக்கு அளித்திருக்கின்றார். மூன்றாந்தர அதிபர் பதவிகளுக்கும, மூன்றாம்தர விசேட பதவிகளுக்கும உடனடியாக மனுக்கள் கோரப்படவிருக்கின்றன

## ஜி. சி. ஈ. ஆசிரியர்கள்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் மூன்றுபாடங்கள் சித்தியடைந்தவர்களும், ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையிலே ஐந்து பாடங்களில் விசேட சித்தியடைந்தவர்களுமான 5,000 முதல் 6,000பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்படவிருக்கின்றனர். இதன்மூலம் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் பற்றுக்குறை நிலைமை ஓரளவில் தீர்க்கப்படவிருக்கிறது.

## ஓவசியர் முறை நின்றது

அரசாங்கத்திலே 51வருடகாலமாக இருந்துவந்த ஓவசியர்முறை சென்ற மாசி 8ஆம் திகதி நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட ஓவசியர்கள் விரும்பினால் இளைப்பாறும் வசதிஅளிக்கப்படுவார்கள். தொடர்ந்து சேவை செய்ய விரும்புகிறவர்கள் புதிய பொறியியல்சேவைப் பிரிவுகளில் அமர்த்தப்படுவார்கள்.

## இளம்ஆசிரியருக்குச் சலுகை

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இளம் ஆசிரியர்கள் கிளிநொச்சி, தீவுப்பகுதி போன்ற கஷ்டமான இடங்களில் கடமையாற்ற முன் வரும்போது அவர்களை இரண்டொருவருட காலத்தில் வசதியான இடங்களுக்கு மாற்றஞ் செய்வதாக வடமாகாண கல்வி அதிகாரி திரு. மகாதந்தில அறிவித்திருக்கின்றார். கிளிநொச்சி, தீவுப்பகுதி ஆகிய பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள் என்பதைத் தான் இங்குவந்து இரண்டு மாதங்களில் அறிந்துகொண்டதாகவும் ஆசிரியர்கள் இல்லாக் கஷ்டத்தால் அப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்

## ஆங்கில அறிவின் குறைவு

"நமது நாட்டுச் சர்வகலாசாலைகளில் உயர்தரகல்வி கற்றுவரும் பெருந்தொகையான மாணவர்களுக்கு ஆங்கில மொழி சூன்னியமாக இருக்கிறது; உயர்தர கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆங்கிலஅறிவு மிகவும் அவசியம்; அதிகமான நூல்கள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன; இவற்றை வாசித்து அறிந்துகொள்ளும் திறமை பட்டதாரி மாணவர்களுக்கு இருக்கவேண்டும்'' என்று பேராதனைச் சர்வகலாசாலைப் பேராசிரியர் சி. டபிள்யு. தமாசிங்க அவர்கள் கண்டியில்நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசியிருக்கின்றார்.

## பொலிசாரின் காவல்

மன்னாரைச் சேர்ந்த தாழ்வுபாட்டிலே சமீபகாலமுதல் மீனவர்கள் இராணுவத்தினரால் அடிக்கடி தாக்கப்பட்டு வருவதாகப் பொலிசாருக்கு முறையிடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மன்னார் உதவிப்பொலிஸ் அதிபரது உத்தரவின்பேரில் பொலிசார் அக்கிராமத்தைக் காவல்செய்துவருகின்றனர்.

## வடபகுதி அசைஸ் விசாரணை

இவ்வாண்டின் முதலாவது பருவச் சுப்றீம் கோட்டு விசாரணை சென்ற வெள்ளிக்கிழமை பகல் 11மணிக்கு நகரசபை மண்டபத்திலே நீதியரசர் சி. ஜி. விரமந்திரி அவர்கள்முன்னில் ஆரம்பமாயிற்று. இம்முறை அதிலே ஆறு கொலைவழக்குகளும், மூன்று கொலை முயற்சி வழக்குகளும், ஒரு தற்கொலை முயற்சி வழக்கும், ஒரு கைமோசக்கொலை வழக்கும் விசாரணைக்குவரவிருக்கின்றன. நீதியரசர் விசாரணையை ஆரம்பிக்குமுன் தமது பரிவாரசமேதராய் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலுக்குவந்து ஆராதனைவழிபாட்டில்கலந்து இறைவன் திருவருளை இரந்து கொள்ளலாயினர்.

## உபஉணவுப் பொருட்கள்

இலங்கையிலுள்ள சகல கூட்டுறவு—மொத்தவிற்பனவு நிலையங்களிலும் உபஉணவுப் பொருட்கள் இனிமேல ஒரே விலையில் விற்பனை செய்யப்படும். கூட்டுறவு — மொத்த விற்பனவுத் தலைவர்கள்சபை அவ்வாறு தீர்மானித்திருக்கிறது.

## இலங்கை ஜனநாயகம் உலகுக்கே ஓர் எடுத்துக்காட்டு

ஐக்கிய அமெரிக்கதேச செனேற்சபையின் ஒருபிரதான அங்கத்தவரும், எதிர்க்கட்சியின் சார்பில் ஜனாதிபதி நிக்சனுக்குப் பதிலாக அடுத்தமுறை ஜனாதிபதியாக வரக்கூடியவரென மதிக்கப்படும் செனெற்றர் மஸ்கி இலங்கையிலுள்ள ஜனநாயக முறையை வானளாவப் புகழ்கின்றார். "இலங்கைமக்கள் காட்டும் ஜனநாயக உணர்ச்சி உலகமக்களுக்கே ஓர் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்" என்கிறார். அவருடைய மனதைக்கவர்ந்திருப்பது மக்கள் ஜனநாயக முறையில் வன்முறையாதுமின்றி தம் மனதுக்குப்பிடித்த கட்சிகளை ஆட்சிபீடத்தில் அமைக்கும்தன்மையே.

## றொடீசிய தேச மேற்றிராணிமாரின் மறுப்பு

இன ஒதுக்குதலை நோக்கமாகக் கொண்டியங்கும் சிமித்அரசாங்கம் அத்தேச மேற்றிராணிமாரை தனது கொள்கைக்கு ஆதரவுஅளிக்க பலவகையான முயற்சிகளும் செய்துவந்த பொழுதிலும் அத்தேச மேற்றிராணிமாரின் எதிர்ப்பை அகற்ற முடியாது திகைக்கின்றது. வெள்ளையரின் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் நிறத்தவரின் பிள்ளைகள் இல்லாதிருக்கவோ அன்றேல் அவர்களின் தொகையைக் கட்டுப்படுத்தவோ மேற்றிராணிமார் திண்டற மறுத்துவிட்டனர். அரசாங்கத்துக்குப் படிய நிர்ப்பந்தம் செய்யப்படுவாராயின் தம் பள்ளிக்கூடங்களை மூடிவிடுவதற்கும் தயாராக இருக்கின்றனர்.

## "மக்களின் கவலை ஒரு நேரச் சோற்றுக்கே"

இந்நாட்டு மக்களின் போக்கைக் கூர்ந்து அவதானித்து, உண்மையைக் கூறத்தக்க வல்லுனர்களில் ஒருவர் காலித்தொகுதிக்கு ஆட்சிமன்ற அங்கத்தினராயிருக்கும் தகநாயகஅவர்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அவர் தன்னைப்பேட்டிகண்ட பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அண்மையில் கூறியதாவது: "எமது நாட்டுப் பொதுமக்கள் மகாவலி கங்கை திசைதிரும்பும் திட்டத்தைப்பற்றியோ அல்லது புதிய அரசியல்சாசன திட்டத்தைப்பற்றியோ பெரிதும் அக்கறைகொள்வதில்லை. அவர்களுடைய கவனம் நேரச்சோற்றை அதிகசெலவின்றிப் பெறுவதிலேயே செல்கின்றது" என்றார்.

சிறு கதை

# கல்லும் கனியாகும்

ஒரு பட்டினம். அந்தப் பெரிய பட்டின வட்டாரத்திலே வாழும் மக்களைத் தொந்தரவு செய்துவந்தது ஒரு பெரிய கொள்ளைக் கூட்டம். அந்தப் பட்டின வட்டாரத்திலே எப்போ பார்த்தாலும் ஒரே கூக்குரல். என்னவென விசாரித்தால், "ஐயோ திருடன் திருடிவிட்டானே; பொருளைக் கவர்ந்து கொண்டானே" என்ற ஓலம்தான். இந்தக் கொள்ளைக்கூட்டம் பற்பல இடங்களிலும் மாயமாக நடமாடியது. இரவிலும் பகலிலும் யாருக்கும் எதற்கும் அஞ்சாமல் வழிப்போக்கர்களிடமிருந்தும், இப்பயங்கர கொள்ளைக் கூட்டத்தினலே கடாத்தப்பட்டுவந்த "கைறகிளப்புக்கு" வரும் பெரிய முதலாளிகளிடமிருந்தும் பொருள் பணம் எல்லாவற்றையும் சூறையாடியது. கைறகிளப்புக்குவரும் பெரிய முதலாளிமாரின் பணத்தைச் சூறையாடுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. விஷயம் அம்பலமாகிவிடுமே என்று ஆட்களையுமே தீர்த்துக்கட்டிவந்தது.

இந்தக் கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் துரைராஜ். அவனொரு கல்நெஞ்சன். அவனுக்கு வேண்டியது பணம். நிலையற்ற செல்வத்தைக் களஞ்சியமாகச் சேர்த்துவைப்பவன். உயிர்ப்பலிக்கு அஞ்சுபவன் அவனல்ல. ஆணாக இருந்தாலென்ன, பெண்ணாக இருந்தாலென்ன, குழந்தையாக இருந்தாலென்ன, ஏழையாக விருந்தாலென்ன, செல்வந்தனாக விருந்தாலென்ன யாருக்கும் இரக்கம்காட்டும் குணம் அவனிடம் கிடையாது. அவன் ஒரு சமூகத்துரோகி; பணப்பித்தன். பணம் பணம் என்றுசொல்லி பாரபட்சமற்ற முறையிலே பணத்துக்காக உயிர்களைப் பழிவாங்கும் பாதகன்.

இந்தக் கொள்ளைக்கூட்டத்தின் அட்டகாசத்தைப்பற்றி அவ்வட்டாரமக்கள் பொலிசிலே ஆயிரம்தடவை புகார் செய்திருப்பார்கள். எத்தனை தடவைதான் முறையிட்டாலும் துரைராஜனின் கொள்ளைக் கோஷ்டியைப் பொலிசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தப்பயங்கரமான பட்டின வட்டாரத்திலே வறுமையின் பிடியிலே வாழ்ந்துவந்தான் வரப்பிரகாசம் என்னும் ஓர் இளம் கத்தோலிக்க குடும்பஸ்தன். இந்த வரப்பிரகாசம் மிகமிக நல்லவன், பொறுமையே வடிவானவன் தெய்வபக்தி நிறைந்தவன். காலைமாலை ஆலயம் சென்று இறைவணக்கம் செய்யத் தவறவே மாட்டான். எங்கு சென்றாலும் தனது வீட்டு வாசலிலே தூக்கப்பட்டிருக்கும் திருஇருதயநாதரின் படத்துக்கு முன்பாக வந்து நின்று "இருதயநாதரே என்னை இரட்சியும்" என்றுவேண்டிக் கொண்டுதான்செல்வான். பாடுபட்டுப் படித்துப் பதவியற்றிருக்கும் இளம் விவசாயியான வரப்பிரகாசம் அவ்வூர் இளம் விவசாயிகள் சங்கத்திலே பொருளாளராகப் பணியாற்றி வந்தான்.

ஒருநாள் விவசாயி வரப்பிரகாசம் விவசாயசங்கம் அரசாங்கத்துக்குக் கடன்கட்டவிருந்த 2,000ரூபாவை எடுத்துக்கொண்டு கடன் கட்டுவதற்காக வங்கிக்குச் சென்றான். பாதையிலே பயங்கரமான முறையில் துப்பாக்கி சகிதமாக நான்குபேர் அவனை வழிமறித்து அவன் பலவாறு இரந்துகூறியும் கேளாதவர்களாய் அவனுடைய பணத்தைச் சூறையாடினார்கள். அவர்கள் துரைராஜனின் கொள்ளைக் கூட்டத்தவர்கள் என்று வரப்பிரகாசத்துக்கு நம்பிக்கையாகத் தெரியும்.

எஸ். இ. ஜெயராசா,
நரக்களி

ஐயோ பாவம்! அவன் சங்கத்தாருக்கு என்ன மறுமொழி கூறுவான்? திகைப்படைந்தவனாய் வீடுநோக்கித் திரும்பினான். ஆனால் அவன் இறைவிசுவாசத்தை மட்டும் இழந்துவிடவில்லை "ஆண்டவரே எல்லாம் உம சித்தப்படியே ஆகட்டும்" என்று கூறிக்கொண்டே வீட்டுப்படியிலே நின்றான். பொலிசிலே முறைப்பாடு செய்வதில் எதுவித பிரயோசனமுமில்லை என்பதை உணர்ந்தவனாய்ச் சிலமணி நேரமாக சிந்தனைக் கடலிலே ஆழ்ந்திருந்தான். இறுதியிலே ஒரு முடிவுக்கு வந்தான் கொள்ளைக் கூட்டத் தலைவன் துரைராஜ் தனது உடன் மாணவன் என்பதை உணர்ந்தான். அதே சமயத்திலே துரைராஜ் அவனுடைய உடன் மாணவர்களுக்கே தீங்கு செய்கின்றானே; எனக்குமட்டும் இரங்கப் போகின்றனா? என்ற நினைவும் அவனுக்கு வந்தது. மீண்டும் சிந்தித்தான். அப்போது அவனுக்கு ஒருவழி தோன்றியது. "படைத்தவனுக்குத் தெரியும்தானே படியளக்க, ஏழைகளை ஒருபோதும் இறைவன் கைவிடமாட்டார்" என்று கூறிக்கொண்டு திருஇருதயநாதரின் படத்துக்கு முன்பாக வந்துநின்று வேண்டிக்கொண்டான், உண்மையைக் கூறிக் கேட்டுப் பார்ப்போம்; ஆண்டவரின் சித்தம் எப்படியோ அப்படியே நடக்கட்டும் என்று சொல்லிக்கொண்டே தனது மனைவியிடம் விடைபெறுகாட்டுப்புறமாகவிருக்கும் துரைராஜின்வீடுநோக்கி விரைந்தான். அங்கேயிருந்த காவலாளிகள் வரப்பிரகாசனை அழைத்துச் சென்று துரைராஜின்முன் நிறுத்தினர்கள். அவனது வாயிலிருந்து சிகரட்புகை குபுகுபுஎன்று போய்க்கொண்டிருந்தது. வரப்பிரசாதத்துக்கோ பயமாகவே இருந்தது. வாயிலிருந்த சிகரட்டை எடுத்தவாறே துரைராஜ் பேசத் தொடங்கினன். "நீ யார்? இங்கு வந்ததன் நோக்கம்" என வினவ வரப்பிரகாசம் "நான் தானுங்க சிறுவயது முதல் உங்களுடன் படித்த உடன்மாணவன் வரப்பிரகாசனுங்க" என்றுகூற, துரைராஜ்: "டேய், அதெல்லாம் வேண்டியதில்லை வந்த விஷயத்தைச் சொல். நீ சொல்வதற்கு முன்பே நீ எதற்காக இங்கு வந்திருக்கிறாய் என்பது எனக்கு நன்றாகப் புரிகின்றது ......உம்... உன்னிடமிருந்து பாதையிலே வைத்துப் பலாத்காரமாகப் பறித்தெடுத்த 2,000 ரூபாவையும் மீட்டுக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் தானே நீ இங்கு வந்திருக்கின்றாய். அதெல்லாம்நடக்காது. வேறு ஏதாவது இருந்தால் சொல்" என்று கூற வரப்பிரகாசம் உண்மையை உரைக்கத் தொடங்கினன். "ஐயா! பெரியவரே இது ஏழை விவசாயிகள் நெற்றிவியர்வை நிலத்திற் சொரிய உழைத்த பணமுங்க. அரசாங்கத்திலே எமது விவசாய சங்கம் கடன்பட்டிருந்த இரண்டாயிரம் ரூபாவையும் இந்த வாரத்துக்குள்ளே கட்டவேணுங்க. இது என்னுடைய சொந்தப் பணமாக இருந்தா நான் விட்டிடுவேனுங்க. இது ஊரவர்களின் பணம். இதை உங்களுக்குத் தந்தா நான் அவர்களுக்கு என்னபதிலைக்கூறுவேனுங்க; வயிற்றுப் பசியைத் தீர்க்க வழியில்லாத ஏழையாகிய நான் இரண்டாயிரம் ரூபாய்க்கு எங்கே போவேன். உண்மையை உள்ளபடி உரைத்தேனுங்க. நல்ல மனசுவைத்து இந்த ஏழைமீது இரங்குங்க ஐயா!" என்று கூறிமுடித்தான். இந்த உண்மை வார்த்தைகள் கல்நெஞ்சன் துரைராஜின் இதயத்தைக் கனியாக்கியது இறைவன் அவனுடைய இதயத்தை மாற்றிவிட்டார். துரைராஜ் மனம்இளகினன். உடனே இரண்டாயிரம் ரூபாய்எடுத்து வரப்பிரகாசத்தை நோக்கி: "வரப்பிரகாசா! இதோ உன் பணம்; இந்த விஷயத்தைப்பற்றி யாருக்குமே சொல்லாதே. யாருக்கும் சொன்னே அப்புறம் என்னநடக்குமென்று எனக்கே தெரியாது, சரிசரி சென்று வா" என்று கூறினன், வரப்பிரகாசம், "வணக்கம் துரை; நீங்க நல்லாவாழணும்; நான் வாறேனுங்க" என்று உரைத்தபடியே வீடு நோக்கிச் சென்றான். வீட்டை அடைந்ததும் திருஇருதயநாதரின் படத்துக்கு முன்பாக நின்று செபித்து நன்றி கூறினன்.

(யாவும் கற்பனை)

## என்ன உலகம்!

என்ன மனிதர்!
இதயம் சுருங்கிய
சின்ன மனிதர்—அன்பு
செத்த மனிதர்!

இருட்டு உலகம்
ஏய்த்துப் பறிக்கும்
திருட்டு உலகம்—இது
தீய உலகம்!

உடலை விற்று
வயிற்றை நிரப்பும்
கடையர் உலகம்—இது
கணிகையர் உலகம்!

உழைப்பின் மூலம்
உயர்வோன் தன்னை
அழிக்கும் உலகம்—இது
அநியாய உலகம்!

காதல் என்ற
கனியில் மயங்கும்
ஆதாம் உலகம்—அசட்டு
ஆண்கள் உலகம்!

உடையைக் கொண்டு
ஒருவனை மதிக்கும்
மடையர் உலகம்— அறிவு
மங்கிய உலகம்!

அரை நிர்வாண
ஆடை அணியும்
அரிவையர் உலகம்—இது
ஆபாச உலகம்!

பொறாமைத் தீயால்
பொசுங்கிச் சாகும்
பிறவிகள் உலகம்—இது
பேய்களின் உலகம்!

வெளியில் நன்கு
வேஷம் போடும்
எளிய உலகம் — இது
ஏமாற்று உலகம்!

காசு இருந்தால்
கனிவு காட்டும்
மோச உலகம் — பண
முதலைகள் உலகம்!

கவிஞர்:
வாகரைவாணன்

# 95ஆம் ஆண்டு நிறைவு விழா

நீலத்திரைக் கடலாற் சூழப்பட்ட நெடுந்தீவு மத்தியிலுள்ள றோ. க. ஆண்கள் சிரேஷ்டவித்தியாலயம 95 வருடம பிரயாணம செய்து வித்தியா சேவையென்னும மலைமீதேறி, மேற்படி வித்தியாலயத்தை அடிகோலி வைத்த மகாவர், மேற்றிராணிமார், பிரதம முகாமையாளர் பங்குக்குரவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை நினைவுகூருமுகமாக, ஒரு பெருவிழா எடுத்தது. இரு நாட்களாக நடந்த திருவிழாக்களில பலபேரறிஞர்கள் பங்குபற்றிக் களித்திருந்தளித்தனர்.

முதலாம் நாள்விழாவில் யாழ்- துணை ஆயர் வண. எல. ஆர். அன்ரனி ஆண்டகையவர்கள் பரி யுவானியார் ஆலயத்தில திருப்பலி ஒப்புக்கொடுத்தார். மு. ப. 9-00 மணியளவில் உள்ளும் புறமும அலங்கரிக்கப்பட்ட வித்தியாலயத்தில துணை ஆயரை வரவேற்பு, வாழ்த்துக்கீதம வழங்கியதோடு அதிபர் க. த. ஞானப்பிரகாசம் அவர்களால் வரவேற்புரையும வழங்கப்பட்டது. காரியாதிகாரி ஏ. சி. செபநாயகம், சமாதான நீதவான் க. நாகேந்திரர், கிராமச் சங்க அக்கிராசனர், ஏ. ரி. அம்பலம அவர்கள் பாராட்டுரைகள் வழங்கினர். முன்னாள் அதிபர்கள் மூவராகிய, திரு. சுவாமிநாதன் ஞானசேவியர், யோசேப்பு ஞானப்பிரகாசம, சவிரிமுத்து சின்னப்புநாயகம் என்போரது சேவைகளைப் பாராட்டியதுடன் அன்னாரின் உருவப்படங்களும் திரைநீக்கஞ்செய்து வைக்கப்பட்டன. அரசாங்க கூட்டுத்தாபனங்களில் வேலைசெய்து இளைப்பாறிச் சம்பளம பெறும் 21 பெற்றோரின் சேவைகளைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். ஓய்வுபெற்ற ஆசிரியரும, ஆயுர்வேத டாக்டருமாகிய திரு. ம. யோ. சின்னத்துரை அவர்களின் சேவை நலம் பாராட்டு விழாவும் நடைபெற்றது. அதில் வாழ்த்துப்பாக்கள் இசைக்கப்பட்டன; பொற்கிழி வழங்கப்பட்டு பொன்னாடையும் போர்க்கப்பட்டது. அதிபர், ஆசிரியர், பெற்றோர் சார்பாக திருவாளர்கள் ச. சின்னப்புநாயகம, ம. யோ. சின்னத்துரை, யோ. பிரான்சிஸ் சேவியர் என்போர் நன்றியுரை வழங்கியதோடு துணை ஆயர் தமது ஆசீரையும் அளித்தனர்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் வட்டாரக்கல்வியதிகாரி திரு. அ. சி. நல்லையா, B. A. அவர்கள் தலைமையில் பரி. யுவானியார் அரங்கில் ஆரம்பமாயின. வீரமாமுனிவரின் கடவுள் வணக்கமும் பாரதியாரின தாய்மொழி வாழ்த்தும இசைக்கப்பட்டன. அதிபரால வரவேற்புரையும, ஆண்டறிக்கையும் நிகழ்த்தப்பட்டன. துணைவர்களின் அடக்கியதாய் நினைவு விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது; கல்வியதிகாரி அவர்கள அம்மலர் குறித்தும், அதன் தலைவர் பண்டிதஞானி குறித்தும், திருச்சபையின் தூய பணி குறித்தும் ஆற்றியவுரைகள் பொன்பூச்சொரிந்தவாறாய் அமைந்தன. திருமதி சொர்ணம்பாள நல்லையா, B. A. அவர்களால் மாணவர்க்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு பெரிய தபாற்கந்தோரில சேவைபுரிந்துவரும் ச. அ. செபரத்தினம், மு. வி ஆசீர்வாதம், ஜே. பி. என்போர் சொற்பெருக்காற்றினர் முன்னாள் பாதுகாவலன் பத்திராதிபர் அ. ஞானப்பிரகாசம அவர்கள் தலைமையில் கவியரங்கம் ஒன்று அழகியமுறையில நிகழ்த்தப்பட்டது. வித்துவான் ச அடைக்கலமுத்து, கவிஞர் ச. அமிர்தநாதர் ஆகியோர பங்குபற்றினர். அன்னார்க்குப் பொன்னாடை போர்க்கப்பட்டது. ஆசிரியர் யோ. சொன்ஸ்ரன் அவர்களால் அழகாக முறையிற் பழக்கப்பட்ட நாடகங்களும், சங். அன்னியர் மடத்து கன்னியர்களும், ஸ்ரீமதி ஜெயமணி கனகரத்தினம், செல்வி யோகம் அம்பலவாணர், திரு பி. டெனிஸ்ற், பி. யோசேப்பு என்பவர்களால் பழக்கப்பட்ட ஏனைய கலை நிகழ்ச்சிகளும் எல்லோரையும் பேருவகைபெறச் செய்தன, அதிபர் 'பண்டிதஞானி' யின் அருஞ்சேவையை அனைவரும் பாராட்டினர்.

செயலாளர் யோ. சொன்ஸ்ரன் அவர்களின் நன்றியுரையோடு விழா இனிது நிறைவேறியது.

—நிருபர்.

● கம்யூனிஸ்த சீனா தனது இரண்டாவது செயற்கைக் கிரகத்தைச் சென்ற 3ஆம் திகதி வானவெளிக்கு அனுப்பியிருக்கிறது. இப்பொழுது இது பூமியை வலம் வந்து கொண்டிருக்கிறது. உலகத்தை அதிர்ச்சியடையச் செய்ய உண்டுபண்ணிய அதன் முதலாவது செயற்கைக் கிரகம் 1970ஆம் ஆண்டு சித்திரை 24ஆம் திகதி அனுப்பியது.

அ. இ. ம. மகாநாட்டு நினைவுமலர்

# பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதில் பெற்றோரின் பங்கு

(உ. தவி ஆயர் அதிவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை)

[முன் தொடர்ச்சி]

**பெற்றோரின் உரிமையும் கடமையும் :**

மனித மாண்பு அறிவு வளர்த்தலாகும். ஒருவன் வாழ்க்கைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தவேண்டி இப்பயிற்சியில்தான் அவன் கல்வி கற்க வேண்டியிருக்கிறது. இவ்வுலகில் ஒரு குழந்தை தோன்றுவதற்குப் பெற்றோரே காரணராக இருக்கின்றனர். ஆகவே, அக்குழந்தைக்குக் கல்வி ஊட்டும் இறைமை உரிமையும் தலையான கடமையும் பெற்றோரைச் சார்ந்ததாகும். இவ்வுலகில், அவர்களே குழந்தையின் முதன்மையான முதல் ஆசிரியர்களாவர். பிறப்பாலும் உரிமையாலும் பொறுப்பு பெற்றோரைச் சார்ந்ததென்பது உண்மையும் உறுதியுமானதாகும்.

இன்றைய ஞானஸ்நானச் சடங்குமுறை, ஞானப்பெற்றோரிலும் பார்க்கக் குழந்தையின் தாய் தந்தையருக்கே முக்கிய பொறுப்பு உண்டு என்பதை உணர்த்துகிறது. எத்தனையோ பெற்றோர், குழந்தைகளின் ஞானக் கடமைகளை குருக்கள், பாடசாலை ஆசிரியர்கள், கன்னியர்கள் ஆகிய சமயத் தொண்டர்களில் சுமத்தி விடுகிறார்கள். இதனால் பெற்றோர் தமது பொறுப்பின் பெரும் பகுதியைக் குறைத்துக் கொண்டார்களே அன்றி குழந்தைகளுடன் ஒன்றுசேர்ந்து மறைக் கல்வி வித்தை விதைத்து, அவர்கள் பெற்று மகிழும் மெய்யின் அருளின் இன்பத்தை துய்த்து, மகிழ்கிறார்கள் இல்லை. ஆசீர்வாதமாக மட்டுமல்ல, உடல் நலத்தாற்றலுமே பெற்றோராக இருக்கிறோம் என்று எண்ணி வாழும் பெற்றோருக்கு இன்றைய ஞானஸ்நான ஒழுங்கு விழிப்புணர்ச்சியைக் கொடுக்கிறது; அக்கறையையும், ஊக்கத்தையும் ஆக்குவிக்கிறது. இன்று குழந்தையின் ஞானஸ்நானத்தின்போது தாய் தந்தையர் கட்டாயம் சமூகம் அளிக்கவேண்டும். ஞானஸ்நானத்தினால் கடவுளின் குழந்தையாகப் புது உயிர்பெறும் தம் பிள்ளையின் விலையில்லா மதிப்பையும், இத் தேவதிரவிய அனுமானத்தின் கொடையையும் உணர்ந்தால்தான் அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய முடியும்.

**மறைக்கல்வியின் நோக்கம் என்ன?**

பிள்ளைகளிடம் விசுவாசக் கொடையை உணரவைத்தல். பிள்ளைகள் தூய ஆவியின் ஒளியில் செயலாற்றச் செய்தல், அவர்களை உண்மையிலும் நீதியிலும் வளர்த்தல், அவர்கள் தம்மைப் புனிதப்படுத்தவும், கிறீஸ்துவுக்குச் சான்று பகரவும் செய்தல் முதலியன. பொதுவாகக் கூறின்; ஞானஸ்நானத்தினால் பிள்ளைகள் பெற்ற விசுவாசத்திற்குத் தக்கபடி கடவுளை அறியவும் வழிபடவும், பிறருக்கு அன்பு செய்யவும், வாழ்வைப் புனிதப்படுத்தவும் பயிற்றலாகும்.

கல்வி தனிப்பட்டதல்ல, பொதுவானது; எல்லா இடத்திலும் ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அடிப்படைப் பயிற்சியைக் குடும்பம் பெற்றோரும் பயிற்றுதல் வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், குமாரர்கள், இளைஞர்கள் ஆகிய பருவத்திலும் மறைக்கல்வி ஊட்டப் பெற்றோர் தம்மைத் தகைமை உடையவர்களாக்கிக் கொள்ளல் அவசியம். புதிய கருத்துக்கள், பிரச்சினைகள், புதிய சிந்தனைகள் தோன்றும் போதெல்லாம் பெற்றோர் அறிவு கொடுத்து, அதியாகமையைத் தீர்க்க வேண்டும். மனக்கிலேசம், அல்லலாய்ப்புகள் அறுதி உண்மையான, உறுதியான, கருத்துக்களை அவர்களிடம் அழுத்தித் தெளிவாக்க வேண்டும். புதிய கல்வித் திட்டங்களை அவர்கள் கண்டு அறிந்து சரியான ஒழுங்கு அவர்களுக்கு வழி திறக்கவேண்டும்.

பிள்ளைகள் தம் அறிவு கண்டு தெரியும் காலம்வரை தாய் தந்தையர் நாளும்பொழுதும் அயராது அவர்களில் கண்ணோட்டம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பிள்ளையின் திறமை, இயல்புக்கும் செயற்றிறனுக்கும் ஏற்ப படிப்படியாக கல்வி முறையில் வளர்த்து, துறவறத்திற்கோ, இல்லறத்திற்கோ தகுதியுடையவர்களாக்க வேண்டும். பெற்றோர் கொடுத்த அறிவுப் பயிற்சிதான் அவர்கள் தம் வாழ்க்கையைத் திறம்பட நடத்த அத்திவாரமான உதவியாக இருக்கும்.

மறைக்கல்வி ஊட்டும் முறையில், பெற்றோர் தம் சொல்லாலும், முன்மாதிரிகையாலும் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். கிறீஸ்தவ உறவுகளில் தந்தைக்குரிய விசேட பங்கென்ன? தாய்க்குரிய விசேட பங்கென்ன என்பதை அவர்கள் அறிந்து செயல்படவேண்டும். பெற்றோர் வீட்டுச் சூழ்நிலையைத் தகுந்தவாறு அமைத்தால் அச்சூழ்நிலையில் எளிதாக இயக்கம் இலகுவாகும். மறைக்கல்விக்கான பலவேறு உதவிகள் கிடைக்கின்றன. திருமணத் திருவருட்சாதனத்தின் விசேட அருள், இறைவழிபாட்டுச் சடங்குகள், சிறப்பாகத் திவ்விய பூசைப்பலி ஞானவாழ்வுக்கு உதவுகின்றன. ஒருவர் ஓர் அந்தஸ்துக்கு அழைக்கப்படும்போது, அவருக்கு வேண்டிய வாழும் அறிவுணர்ச்சியும் கொடுக்கப்படும்; இறைவனில் நம்பிக்கை கொண்டிருந்தால் சகலவித உதவிகளும் வாய்ப்பெறும். இறைவனுக்கும் உலகத்திற்கும் உகந்ததாய் நடக்க அருள் கிடைக்கும்.

பாடசாலைகளில் அல்லது பங்குகளில் அளிக்கப்படும் மறைக்கல்வி, பக்திச்சபைகள், கிறீஸ்தவ மன்றங்கள், போன்றவை பணிக் குழுக்கள் என்பன கல்வி உதவிகளை உதவி நிற்கின்றன. அவற்றை ஏற்றமுறையில் அணுகிப் பலனடையப் பெற்றோர் கூடிய அக்கறை கொள்ளவேண்டும். பிள்ளைகளை அவற்றில் பங்குபற்றிப் பலனடைய வழிசெய்தல் வேண்டும்.

பாடசாலையைப் பொறுத்த வரையில் இன்றைய நிலைமை மிகக் கஷ்டமானது. சமய பாட நேரம் மிகக் குறைவு. சமயசுதந்திரம் இழிந்த நிலையில் உள்ளது. சமய அறிவு ஊட்டத் தேவையான ஆசிரியர்கள் இல்லை. அறிவு புகட்ட மாத்திரமல்ல வாழ்க்கையைப் பயிற்றவும் ஏற்ற சந்தர்ப்பம் இல்லை. இக்கட்டான இந்நேரத்தில், மக்களுக்கு மறைக்கல்வியின் பூரணவளர்ச்சியைக் கொடுக்கப் பெற்றோரே முன்வரவேண்டும். ஆசிரியர்களுடன் அடிக்கடி கலந்துரையாடி அவர்கள் நல்ல ஆலோசனைகளைப் பெறவேண்டும். பாடசாலையில் பிள்ளையின் மறைக்கல்வியின் தரத்தை ஆராய்ந்து ஏற்ற முறையில் அவர்கள் அறிவும், உணர்ச்சியும்பெற பெற்றோர் வாய்ப்பான முறைகளைக் கையாள வேண்டும். இவ்விதம் அவர்கள் மறைக்கல்வியை வளர்ப்பார்களானால், பாடசாலையில் சகல பாடங்களிலும் மறைக் கல்வித் தொடர்பை ஏற்படுத்தி இறை அன்பிலும் பிறர் அன்பிலும் அவர்கள் இரண்டறக் கலந்து வளர முடியும்.

பிள்ளைகளின் ஞானவளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் பாடசாலைகளின் தரம் குறைந்து வருவதால் திருச்சபையின் பல்வேறு நிறுவனங்களின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து அவைகளோடு ஒத்துழைக்க வேண்டும். குருக்களுடன் இளைஞரும், பெற்றோரும் ஒன்றுசேர்ந்து புதுப்புது ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் சங்கம் எழுப்பவேண்டும், கிறீஸ்தவமறைக் கல்விச்சபை ஒவ்வொரு பங்கிலும் திறமையாக நடக்க உதவி அளிக்க வேண்டும்.

(அடுத்த இதழில் திருமதி அந்தோனியா சாமிநாதரின் பேச்சு இடம்பெறும்.)

# உயிர்ப்பவரை எதிர்கொள்ளல்

ஆதியிலே சாக்குடை தரித்து, சாம்பல் தோய்ந்து தவம் புரிந்தது கிறிஸ்தவ மக்கட் சமுதாயம். உத்தான பண்டிகை வருமுன் அவர்கள் தம்மிலேயே உத்தானத்தைப் பிறப்பிக்க விழைந்தனர். புதிதாகக் கிறிஸ்தவரானோர் இன்னும் கூடிய கடுந்தவம் புரிந்தனர்.

அதே சூழ்நிலையை உண்டு பண்ணி அரும்பெரும் சந்தர்ப்பத்தைத் தந்து, திருச்சபை ஒருகாலத்தைப் பிறிதாக ஒதுக்கியுள்ளது. இக்காலத்திலே வீண் பராக்குகளைத் தவிர்த்து உயிர்த்த ஆண்டவரை மட்டும் கருத்தில் கொள்ள வாய்ப்பளிக்கும் முகமாகப் பெருங் கொண்டாட்டங்களையும், மண வைபவங்களையும் திருச்சபை தவிர்த்துள்ளது. இத்தகைய அடையாளமாக ஊதாநிறம் ஆலயத்திலே காணுகிறோம்.

உயிர்த்தவரை எதிர்கொள்கின்றோம்! ஆனால் உயிர்த்தவர் உயிர்க்குமுன் என்ன அனுபவித்தார்? உத்தானத்தின் மகிமை முன் பாடுகளோடு கொடூரமரணம் அவர் அனுபவிக்க வேண்டி இருந்தது. பாடின்றி பட்டமில்லை, பெரிய வெள்ளியின்றி உயிர்த்த ஞாயிறு இல்லை; துன்பமின்றி இன்பமில்லை. வித்தானது உக்கிப்போகாது; உயிர் கொண்டெழாது. ஆகவே, இத்தகைய பாடுகளும், மரணமும் உத்தான முதல் இருந்தே தயாகவேண்டும்.

நாம் நோயுற்றிருந்தால் நிவாரணம் அடைந்தேயாக வேண்டும். புற்றுநோய் கொண்ட அங்கத்தை உடம்பிலிருந்து துண்டித்தேயாக வேண்டும்.

ஆகவே, குறைகள் பல இருந்தாலும், பாடுகள் பல அனுபவிக்க நேரிட்டாலும், மரணத்தை அனுபவிக்க நேரிடினும் எம்மையே நேர்மையோடு நாம் எதிர்கொண்டிடுவோம். வீரர்கள்போல இவ்வித கன்னியமும் நேர்மையும் உண்மையும் தோய்ந்த மனப்பான்மையுடன் தவக்காலத்தை மேற்கொள்வோம். அப்போது உயிர் கொண்டவர் உயிர் தந்திடுவார். உத்தானம் பெற்று உய்திடுவோம்.

அருட்திரு துரைசிங்கம், அ. ம. தி.

ஞானஸ்நானம்பெற்ற யாபேரும் உத்தானத்தில் பங்கெடுக்கிறோம். இதோ! அருள் வாழ்வு வளர அதைப்பற்றிச் சற்று உற்று ஆராய அரியதோர் சந்தர்ப்பம்; இதற்கு நாம் உயிர்த்த ஆண்டவரை உற்றுநோக்க வேண்டும். மகிமை கொண்ட அவரது உத்தானத்தின் ஒளியைக் கண்கொண்டு நோக்கவேண்டும். ஒருவேளை கண்கொண்டு பார்க்கும்போது எமது கண் நோயுற்றிருந்தால் கண்கூசத்தான் செய்யும். உண்மையை எடுத்துரைத்தால் உடம்பு நோகத்தான் செய்யும். ஆனால் சூரியனின் ஒளி கண்ணிற்கு நோவும், கூச்சமும் வருவித்தால் சூரியனைக் குறைகூறுவதா? அன்றேல் கண்ணைக் குறை கூறுவதா?

### நன்றித்துதி

எனது கணவருக்கு ஏற்பட்ட வருத்தம் குணமாகும்படி புனித சூசையப்பரிடமும், பரி. மருதமடுச் செபமாலைமாதாவிடமும் நான் கேட்ட மன்றாட்டு கிடைத்ததற்காக எனது தாழ்மையான நன்றியைத் தெரிவித்து, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதமானது குறித்து மன்னிப்புக் கோருகிறேன்.

ஓர் அடியாள்
போலாவத்தை வாய்க்கால்

### நன்றித்துதி

திருமுகநாதரிடமும், புனிதர்களான சதாசகாயமாதா, சூசையப்பர், அந்தோனியார் இவர்களிடமும் நான்கேட்ட மன்றாட்டு அனுகூலமானது. இவர்கள் நாமம் புகழப்படுவதாக. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். ஓர் அடியாள்

நீர்கொழும்பு 33-71

# உம்முடையவர்களைக் காப்பீர் தேவனே!

—[ தமிழாக்கம் :—மேரி ஜேசலின் ]—

உமது திருப்பீடத்தில் தம்வாழ்வைத் தகனப்பலியிட்டிருக்கும்
உமது குருக்களை அருமையான தேவனே! காத்தருளும்
அவர்கள் உம்முடையவர்களாக இருப்பதால்
அவர்களைக் காத்தருளும்படி நான் உம்மை வேண்டுகிறேன்.

உலகமும் சரீரமும் பொல்லாத சத்துருக்கள் —அவர்கள் தவறும்படி
சாத்தான் அநேகாயிரம் வலைகளை வீசுகிறது — இதை
நீர் அறிந்திருப்பதால் அருமையான தேவனே!
அவர்களை எந்நாளும் காத்தருளும்.

உலகிற்குப் புறம்பானவர்களாக அவர்கள் இருந்தாலும்
உலகிலேயே அவர்கள் இருப்பதால் — அவர்களை
உலக வாஞ்சைகள் மயக்கும் வேளையில்
உமது திருஇருதயத்தினுள் அவர்களை இழுத்துக்கொள்ளும்.

வேதனையும் தனிமையுணர்வும் தலைதூக்கி நிற்கையிலும்
ஆன்மாக்களுக்கான தம்பரித்தியாக வாழ்வு எல்லாம்
வீணாகிவிட்டதாக அவர்கள் காணும் வேளையிலும்
ஆறுதல் அளித்துக் காத்தருளும்.

மண்ணுலகில் நீரன்றி வேறெவரும் அவர்களுக்கு இல்லை
மனித பெலவீனங்கள்கொண்ட மானிட இருதயமே ஒன்றே அவர்களுக்கு உண்டு
மாபரனே! இதைநீர் நினைவுகூர்ந்து — அவர்களை
எந்நாளும் காத்தருளும்.

அனுதினமும் அவர்கள் ஏந்தும் அந்த "தூய அப்பம்" போன்று
அவர்களும் மாசுமறு அற்றவர்களாக இருக்கச் செய்யும்
அவர்களின் ஒவ்வொரு நினைவு, பேச்சு, செயலையும்
ஆசீர்வதித்தருள அன்பின் தேவனே! அருள்கூரும்.

## பூசை வழிகாட்டி
### பங்குனி — 1971.

15. திங்கள் நாள் பூசை [ஊ]
வாசகம் : 4அர. 5 : 1—15
சுவிசேஷம் : லூக். 4: 24—30

16. செவ். நாள் பூசை [ஊ]
வாசகம் : தானி. 3: 25, 34—43
சுவிசேஷம் : மத். 18: 21—25

17. புதன் நாள் பூசை [ஊ]
வாசகம் : உபா. 4: 1, 5—9
சுவிசேஷம் : மத். 5, 17—19

18. வியா. நாள் பூசை [ஊ]
வாசகம் : எரே. 7 : 23—28
சுவிசேஷம் : லூக் 11: 14—23

19. வெள்ளி புனித சூசையப்பர் [வெ]
1-ம் வாசகம் : 2அர 7: 4—5, 12—14, 16
2-ம் வாசகம் : உரோ. 4: 13, 16—18, 22
சுவிசேஷம் : மத். 1: 16, 18—21, 24

20. சனி நாள் பூசை [ஊ]
வாசகம் : ஓசே. 6: 1—6
சுவிசேஷம் : லூக். 18: 9—14

21. ஞாயிறு தவக்கால 4 ஆம் ஞாயிறு [ஊ]
1ஆம் வாசகம் : யோசு. 5: 9—12
2ஆம் வாசகம் : 2கொரி. 5: 17—21
சுவிசேஷம் : லூக்காஸ் 15: 1—3, 11—32

*சத்தியவேத பாதுகாவலன்*

## ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம்

யாக்கோபு கனவிற் கண்ட ஏணியில் ஆயிரக்கணக்கான தேவதூதரைக் கண்டார். அவர்களில் ஒருவராவது அசைவற்று நிற்கவில்லை. ஒன்றில் மேல்நோக்கி ஏறிக்கொண்டு அல்லது கீழ்நோக்கி இறங்கிக்கொண்டிருந்தனர், எமது வாழ்விலும் நடப்பது இதுதான். நாம் சலனமற்று நிற்பதில்லை. ஒன்றில் முன்னேறுகிறோம் அன்றேல் பின்வாங்குகிறோம். "வாழ்க்கை என்பது மாற்றம்" என்று ஒரு பெரியார் கூறியிருக்கின்றார். காலம் செல்லச்செல்ல எமது வயது ஏறிக்கொண்டு போவதைப்போல அறிவும அதிகரிக்க வேண்டும். அறிவு அதிகரிக்க குணங்களும் சிறக்கவேண்டும.

நாம் ஓர் இடத்தை நோக்கி நடக்கும்போது ஒரு கால் தரையில் ஊன்ற, மறுகால் உயர்ந்து நிற்கின்றது. அதேபோல் எதிலும் முன்னேற்றம் காணவேண்டுமானால் இரண்டு அம்சங்கள் வேண்டும். தரையில் ஊன்றிய காலைப்போல் கடந்தவற்றில் ஒரு கண்ணோட்டம் இருக்கவேண்டும். உயர்த்திய காலைப்போல் எதிர்காலத்தில் ஒரு பார்வை இருக்கவேண்டும். கடந்தகால அனுபவத்தையும் எதிர்காலக் காட்சியையும் கண்முன் வைத்துக்கொண்டு வகுக்கும் திட்டம்தான் முன்னேற்றத்திற்கு வழிகோலும்.

ஆன்மீக வாழ்விலும் இப்படியேதான். கடந்த காலத்தின் குற்றங்குறைகளை உணர்ந்திருந்தாற்றான் எதிர்காலத்தில் அவற்றை மேற்கொள்ள முடியும். அதே நேரத்தில் எமது குறிக்கோளும் கண்முன்னே இருக்கவேண்டும். கடந்த காலத்தை மட்டும எண்ணிக்கொண்டிருந்தால் முன்னேறுவது எப்படி?

இந்த முன்னேற்றத் திட்டத்தை வகுக்கும் வேளை எது? ஒவ்வொரு பாவசங்கீர்த்தன வேளையும் விசேஷமாக ஞானஒடுக்க பொதுப் பாவசங்கீர்த்தன வேளையும்தான். அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்தும் அதனால் குறிப்பிடத்தக்க பலன்தையும் பலர் அடையாமற் போவதற்குக் காரணம் அவர்கள் அதைக் குறுகிய நோக்கத்துடன் பார்ப்பதுதான். தமது பாவங்களின் தொகையையும் வகையையும் வெளிப்படுத்துவதும், அவற்றைக்குறித்துப் பொதுப்படையான மனஸ்தாபமும்தான் பெரும்பாலோரின் பாவசங்கீர்த்தனத்தில் அடங்கியுள்ளவை. ஆனால் பயனுள்ள பாவசங்கீர்த்தனத்துக்கு இதைவிட பரந்த நோக்கு வேண்டும். கடந்தகால வாழ்க்கையை எடைபோட்டுப் பார்ப்பதோடு எதிர்காலத்துக்குரிய திட்டமாகவும் அது அமைய வேண்டும். தேவதிரவிய அனுமானங்களை அடிக்கடி பெற வேண்டுமென்றும், கூடிய பக்தியுடன் செபிக்கவேண்டுமென்றும, வீட்டிலும், தொழில்புரியும் இடங்களிலும் கூடிய நீதி நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் நல்ல பிரதிக்கினை எடுப்பது மட்டும் போதாது. அதற்கான வழிவகைகளும் எமது திட்டத்தில் அடங்கியிருக்க வேண்டும. திட்டங்களை தெளிவாக அமைத்துக்கொண்டபின் அவற்றை சரிவர நிறைவேற்ற தேவ திருவருளின் உதவி அத்தியாவசியம் என்பதையும் அதற்காக செபம் செய்யவேண்டுமென்பதையும் மறக்கலாகாது.

# பங்குனி  மாதம்

பங்குனி மாதம் பிறந்தது. இது பிறந்தபோதே தேவசுதனின் திருக் கைத்தாதையும, தேவமாதாவின் திருப்பத்தாவும, திருச்சபையின் பாதுகாவலரும், குடும்பங்களுக்குத் தாபரமுமாகிய சஞ். சூசை மாதவனின் வணக்க மாதமும் மலர்ந்தது. மாதவனாது பக்தகோடிகளின் இதயமும் மகிழ்ச்சியால் பொங்கிமலர்ந்தது. அவரை விசேட விதமாகப் பக்தி செய்து, "பாவாலும், மனப்பூவாலும் சூசை தாதாவைத் துதிப்போம்" என்றும் "சூசை மாதவனைத்—தோத்திரித்தற்கேற்ற—மாசமாம் பங்குனி இதோ-வந்ததின்பமாக" என்றும், "வாழ்க யேசு கைத்தாதையே—தேவமாதாவின் பத்தாவே—தாழ்மைமிகுந்தவரே—வாழ்க, வாழ்க" என்றும் இவ்வாறெல்லாம் பலவாறாக அவரை வாழ்த்திப் போற்றி வரங்கேட்கும் மாதமே வந்தது.

"நீ உனது அனுதின உணவிற்காக அனுதினமும் பிரயாசைப்பட்டுக் கடுமையாக உழைக்கிறவனாயிருந்தால்,

நீ ஒரு குடும்பத்தைத் தாபரிக்கவேண்டிய பாரமான பொறுப்புடையவனாயிருந்தால்,

நீ குடும்பத்திலே பலவித கஷ்டங்கள் உண்டாய் உனது இதயம் கலங்குவதாயிருந்தால்,

நீ பலவித தொல்லை தொந்தரவுகளால் கடுமையாக அலைக்கழிக்கப்படுகிறவனாயிருந்தால்,

நீ உனது வேத விசுவாசம் தளர்ந்து அதிகம் கடுமையாகப் பரிசோதிக்கப்படுகிறவனாயிருந்தால்,

நீ உனது நம்பிக்கை குறைந்து அந்தகாரத்தில்போன்று அவநம்பிக்கைப்படுகிறவனாயிருந்தால்,

நீ நேசித்துச் சேவிக்கவேண்டிய மாதிரி யேசுவையும், மரியாயையும் நேசித்துச் சேவிக்க இன்னுமே படிக்க வேண்டியவனாயிருந்தால்,

திருக்குடும்பத்தின் தலைவரும், கன்னிமரியாயின் திருப்பத்தாவும், திவ்விய யேசுவை வளர்த்த தகப்பனுமாகிய சஞ் சூசையப்பர் நீ பின்பற்றவேண்டிய உனது மாதிரிகையாயும், உனது ஆசிரியராயும், உன் தகப்பனாயும் இருக்கின்றார். ஆனால்,

சஞ்.சூசையப்பரிடம் போ, அவர் சொல்வதையெல்லாம் செய்.

சஞ் சூசையப்பரிடம் போ, யேசுவும், மரியாயும் அவருக்குக் கீழ்ப்படிந்து வந்ததுபோல் நீயும் அவருக்குக் கீழ்ப்படிந்துவா.

சஞ்.சூசையப்பரிடம் போ, அவர்கள் அவருடன் சம்பாஷித்ததுபோல் நீயும் அவருடன் சம்பாஷி.

சஞ்.சூசையப்பரிடம் போ, அவர்கள் அவருடன் கலந்து ஆலோசித்து, அவருடைய புத்திமதியைக் கேட்டதுபோல் நீயும் அவருடன் கலந்து ஆலோசித்து அவருடைய புத்திமதியைக் கேள்.

சஞ்.சூசையப்பரிடம் போ, அவர்கள் அவரைச் சங்கித்து வந்ததுபோல் நீயும் அவரைச் சங்கித்து வா.

சஞ் சூசையப்பரிடம் போ, அவர்கள் அவருக்கு நன்றியறிதலாய் இருந்ததுபோல் நீயும் அவருக்கு நன்றியறிதலாயிரு.

சஞ் சூசையப்பரிடம் போ, அவர்கள் அவரை நேசித்ததுபோல், அவர்கள் இன்னுமே நேசித்துவருவதுபோல் நீயும் அவரை நேசி" என்று பிரபல ஆங்கில கருதினல் வோண் ஆண்டகை கட்டுரைத்திருக்கின்றார்.

அவிலாநகர் அர்ச். பெரிய திரேசம்மாள் சஞ். சூசையப்பரின் பக்தர்களில் தலைசிறந்தவர். அவள் சொல்லுகிறாள்: "அவருடைய ஆதரவைத் தேடினவனும் மன்றாட்டின் உதவியைக் கேட்டவனும் அவரால் ஒருபோதுமே கைவிடப்பட்டதில்லை" என்று.

"சௌக்கியனாய்ச் சீவிக்கவும், கடைசியாய்ச் சீவிய காலத்தில் பாக்கியமானமுடிவை அடையவும் விரும்புகிறவன் எவனோ அவன் சஞ். சூசையப்பரின் உதவியைத் தேடக்கடவான்."

## வல்லவனே ! வரந்தா

வாழ்வென்னும் வேதனையில் மெலிந்தேன் ; நொந்தேன்:
வையத்தின் கொடும்பாவம் நினைந்தேன் ; நைந்தேன்
ஆழ்கடலின் துரும்பாக அலைந்தேன் ; எந்தன்
அன்புருவே ! நின் கருணை உணர்ந்தேன் ; வந்தேன்.

❋

என் குருவே ! இவ்வுலகில் என்போல் வாழ்ந்தீர்
ஏழை தொழிலாளியென இளைப்புங் கண்டீர்.
மன்பதையை அன்புடனே அணைத்தீர் ; காத்தீர்
மாபாவி எனையுந்தும் அணையிற் சேர்ப்பீர்.

❋

கள்வனெனத் துரோகியெனக் கடுஞ்சொல் கேட்டீர் ;
கல்வாரி மலையினிலே உயிரும் நீத்தீர்
வெள்ளமெனுங் கிருபையதும் இறைவா ! உந்தம்
வேதனையும் தவக்காலம் நினைந்தேன் ஐயா.

❋

அருள் பெருகும் நின்செயல்கள் அன்றும் இன்றும்
அறியானாய்ப் பாவமெனும் சூழியில் வீழ்ந்தேன்
பெருகுமனக் கறைபோக்கிக் கண்ணீர் சிந்திப்
பிள்ளையென வாழ்வதற்கு விழைந்தேன் ஐயா ;

❋

தளராத விசுவாசம் தணியாப் பாசம்
தன்னலமே கலவாத அன்பின் நேசம்
அழியாத நம்பிக்கை வேகந் தந்தே
அற்பனது பலவீனம் தீர்ப்பாய் அன்பே.

— யாழ். "ஜெயம்"

எமது ஒவ்வொரு பாவசங்கீர்த்தனமும், விசேஷமாக ஞானஒடுக்க பாவசங்கீர்த்தனம், இவ்வாறு அமையுமானல் ஆன்மீக வாழ்வில் நாளுக்கு நாள் முன்னேறி வருவோம். இறைவனுக்குப் பிரியமுள்ளவராக, அவரது கண்களில் விரும்பத்தக்கவராக ஆகிவருவோம்.

## எழுத்தாளர் கவனத்திற்கு!

காவலன் பரிசுத்தவாரச் சிறப்பிதழுக்கானகவிதைகள், கதைகள், கட்டுரைகளை வரவேற்கிறோம். அனுப்புவோர் இம்மாதம் 24-ம் தேதிக்கு முன்பதாக எமது அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கவும்.

— ஆசிரியர்

இலங்கை வானெலியில்
கத்தோலிக்க நிகழ்ச்சி

"நானே கிறிஸ்து"

தயாரிப்பு :
அருட் திரு : சகோதரர்
தோமஸ் பெர்னாண்டோ,
அ. ம. தி.

நாள் :
18—3—1971

நேரம் :
இரவு 7-00 — 7-30

இப் பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு பங்குனி மாதம் 13-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: 'கதலிக்பிறஸ்,' யாழ்ப்பாணம். தொலைபேசி: 500. தாபிதம்: 1876.